அறிஞர் அண்ணாவின்

வர்ணாசிரமம்

இலட்சியம் வளர்ந்த வரலாறு

போர்வாள்

சீதை பதிப்பகம்

அறிஞர் அண்ணாவின்

வர்ணாசிரமம்,
இலட்சியம் வளர்ந்த வரலாறு,
போர்வாள்

NATIONAL INSTITUTE OF LEADERSHIP TRAINING
#AP.508,, 22nd Street, TNHB Colony,
Korattur, Chennai - 600 080.

சீதை பதிப்பகம்
சென்னை - 600 005.
☎ 9790706549 / 9790706548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயிண்ட் ஜான் சர்ச் வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 1. ☎ : 0431 2419584 / 99520 34876
e-mail : gowraputhagamaiyam@gmail.com

விலை : ரூ. **25.00**

* 4ஆம் பதிப்பு : 2012
* முதற் பதிப்பு : 2008
* © உரிமை : பதிப்பகத்திற்கே
* பதிப்பாசிரியர் : **எஸ். கௌமாரீஸ்வரி** M.A., M.L.I.S.,
* நூலின் பெயர் : வர்ணாசிரமம், இலட்சியம் வளர்ந்த வரலாறு, போர்வாள்
* பக்கங்கள் : 72
* ஒளி அச்சு : ஜெய் ஜீனா
* வெளியீடு : சீதை பதிப்பகம்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
* அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ் செ - 2

CODE : **544**

கௌரா ஏஜென்ஸீஸ்

10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, செ - 5.
☎ : 044-2844 3791 / 97907 06548 / 97907 06549
www.gowrabookfair.com e-mail : gowra09@gmail.com


அம்மாவுக்கு...

பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கைக் குறிப்புகள்

15-9-1909 - தோற்றம்	:	சி.என். அண்ணாதுரை
தந்தை	:	நடராசன்
தாய்	:	பங்காரு அம்மாள்
சிறிய தாயார் (தொத்தா)	:	இராஜாமணி அம்மையார்
பிறந்தகம்	:	சின்ன காஞ்சிபுரம்
வாழ்க்கைத்துணை	:	இராணி அம்மையார்
தொழில்	:	நாட்டுத் தொண்டு - எழுத்தாளர்
புனை பெயர்	:	சௌமியன், வீரன், சமதர்மன், குறிப்போன், சம்மட்டி, ஒற்றன், சாவடி, ஆணி, பரதன்.

1929-1934	:	சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. ஆனர்சு பட்டப் படிப்பு.
26-5-1933	:	கோவை மாவட்டம் காங்கேயத்தில் முதலாவது செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் திருச்சி சி.என். சீனிவாசன் தலைமையில் தந்தை பெரியார் தொடக்க உரை ஆற்ற, அறிஞர் அண்ணா - மாணவர் அண்ணாதுரை சொற்பொழிவு நிகழ்த்த, கேட்டு வியப்புற்றுக் கண்டு பேச தந்தை பெரியார் முயன்று இயலாது போனமை (குடி அரசு - 23-7-1933)
11-2-1934	:	முதல் சிறுகதை 'கொக்கரக்கோ' ஆனந்த விகடனில் வெளிவந்தது.
1-2-1936	:	சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் கல்வி அமைச்சர் குமாரசாமி ரெட்டியார் தலைமையில் பார்ப்பனர் அல்லாதார் இயக்கமும் காங்கிரசும் பற்றிச் சொற்பொழிவு.
ஆகஸ்ட் 1936	:	தந்தை பெரியாருடன் வட ஆர்க்காடு மாவட்டச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளல்.
1936	:	சென்னை மாநகராட்சித் தேர்தலில் நீதிக்கட்சி உறுப்பினராக நிற்றல்.

1937	:	நவயுகம் ஆசிரியர்.
3-1-1937	:	சென்னை தன்மான இயக்க இளைஞர் மன்ற ஆண்டு விழாத் தலைமை ஏற்றல்.
11-4-1937	:	நீதிக்கட்சி செயற்குழு உறுப்பினராதல்.
16-5-1937	:	நீதிக்கட்சி பிரச்சாரக் குழு உறுப்பினராதல்.
1937	:	விடுதலை, குடி அரசு இதழ்களில் துணை ஆசிரியர் பணி ஏற்றல்.
29-8-1937	:	முசிறி தாலுக்கா தன்மான இயக்க மாநாட்டுத் தலைமை உரையாற்றல்.
9-12-1937	:	முதற் கவிதை 'காங்கிரஸ் ஊழல்' விடுதலையில்.
2-9-1938	:	முதல் மடல் 'பரதன் பகிரங்கக் கடிதம்', விடுதலை.
26-9-1938	:	இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மக்களைத் தூண்டிவிட்ட குற்றம் சாட்டி எழும்பூர் நீதி மன்றத்தில் நீதிபதி உன்னி கிருஷ்ண நாயர் நான்கு மாத வெறுங் காவல் தண்டனை வழங்கினார். இராணி அம்மையார் சிறை செல்லும் அண்ணாவை வாழ்த்திய வாழ்த்துச் செய்தி குடி அரசு, விடுதலையில் வெளிவந்தது.
13-1-1939	:	தமிழுக்காக உயிர் நீத்த நடராசன் இறுதி ஊர்வல நாள் - அண்ணா இரங்கற் கூட்டத்தில் உரை.
18-1-1939	:	தமிழர் திருநாள் - சென்னை உயர்நீதிமன்ற கடற்கரையில் டாக்டர் சி. நடேசனார் படம் திறந்து வைத்தல்.
10-2-1939	:	சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் இந்தி எதிர்ப்புச் சொற்போர்.
சூலை, 1939	:	முதல் குறும்புதினம் 'கோமளத்தின் கோபம்' தொடக்கம் - குடி அரசில்.
6-1-1940	:	பம்பாயில் பெரியார், அம்பேத்கார் உரையாடல்; மொழிபெயர்ப்பு.
23-3-1940	:	முதல் புதினம் 'வீங்கிய உதடு' தொடக்கம் - குடி அரசில்.
2-6-1940	:	காஞ்சியில் திராவிட நாடு பிரிவினை மாநாடு.
8-11-1940	:	விடுதலையில் தி.க. சண்முகம் நடித்த 'குமாஸ்தா வின் பெண்' நாடகத் திறனாய்வு.

7-3-1942	:	திராவிட நாடு கிழமை இதழ் தொடக்கம். தலையங்கம் 'கொந்தளிப்பில்' புரட்சிக் கவிஞர் 'தமிழுக்கு அமுதென்று பேர்' எனும் பாடல் முகப்பில்.
14-3-1943	:	சேலத்தில் நாவலர் - பாரதியார் உடன் அண்ணா கம்பராமாயணச் சொற்போர்.
5-6-1943	:	'சந்திரோதயம்' நாடகம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடத்தல்.
19-8-1944	:	சேலம் நீதிக்கட்சி மாநாடு - அண்ணாதுரை தீர்மானம் - நீதிக்கட்சி, திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்று மக்கள் இயக்கமாக மலர்தல்.
15-12-1945	:	சென்னை செயிண்ட் மேரி ஹாலில் 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' நாடகம் அரங்கேற்றம் - அண்ணா காகப்பட்டராக நடித்தல்.
13-1-1946	:	'பணத்தோட்டம்' கட்டுரை.
மே, 1946	:	கருஞ்சட்டைப் படை மாநாடு - தந்தை பெரியாருடன் கருத்து மாறுபாடு முகிழ்ப்பு.
29-7-1946	:	நாவலர் சோமசுந்தரபாரதியார் தலைமையில் பாவேந்தருக்குப் பொற்கிழி அளித்தல்.
25-4-1947	:	'வேலைக்காரி' திரை நாடகம்.
1-6-1947	:	'நீதிதேவன் மயக்கம்' நாடகம்.
15-8-1947	:	திராவிட நாட்டில் 'ஆகஸ்டு பதினைந்து' கட்டுரை - தந்தை பெரியார் 'துக்க நாள்' எனல். பொருந்தாது - அது 'விழா நாளே' எனக் கருத்து விளக்கம் தருதல்.
28-9-1947	:	தந்தை பெரியார் 69ஆவது பிறந்த நாள் விழா சிறப்புக் கட்டுரை 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?'
14-1-1948	:	'நல்ல தம்பி' திரையிடல்.
18-4-1948	:	திராவிட நாடு கட்டுரைகட்குத் தண்டனை ரூ. 3,000. "இதன் விலை மூவாயிரம்" நூலாதல்.
18-6-1949	:	தந்தை பெரியார் மணியம்மை திருமணம். அண்ணா பிரிந்து நிற்றல்.
10-8-1949	:	'மாலைமணி' - முதல் நாளிதழ். ஆசிரியர்.

17-9-1949	:	தி.மு.க. தோற்றம். 'ஒட்டு மாஞ்செடி, தி.மு.க. தொடக்க உரை. இராபின்சன் பூங்கா, இராயபுரம்.
18-9-1949	:	திராவிட நாடு இதழில் 4, 18-4-1948-இல் வரைந்த கட்டுரைக்காக வழக்கு. நான்கு மாதச் சிறைத் தண்டனை ஏற்றல். எதிர்ப்புக் கண்டு பத்தாம் நாள் விடுதலை.
12-1-1950	:	நாடெங்கும் பொங்கல் விழா - அறுவடை விழா - உழவர் விழா எடுக்க அறிக்கை விடல்.
1950	:	திருச்சிச் சிறையில் 'இலட்சிய வரலாறு' எழுதுதல்.
1951	:	'ஆரிய மாயை' நூலுக்குத் தடை.
17-9-1951	:	திராவிட நாடு பிரிவினை நாள் எடுத்தல்.
13, 14, 15, 16-12-1951	:	திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநில மாநாடு, சென்னையில்.
1-8-1952	:	இந்தி எதிர்ப்பு அறப்போர் - இந்தி எழுத்து களை அழித்தல்.
25-4-1953	:	திருச்சி மாவட்ட மாநாட்டில் 'காதல் ஜோதி' நாடகம் அரங்கேற்றம்.
15-6-1953	:	'நம் நாடு' நாளிதழ் தொடக்கம்.
13-7-1953	:	மும்முனைப் போராட்டம் - மும்முனைப் போராட்டம் தூண்டிய குற்றம் சாட்டி மூன்று மாதம் சிறையிடல்.
15-7-1953	:	மும்முனைப் போராட்டம் - கழகத் தலைவர்கள், தொண்டர்கள் கைதாதல்.
3-5-1954	:	மொழி வழி மாநில அமைப்பு அறிக்கை வெளியிடல்.
14-1-1955	:	சொர்க்கவாசல் திரையிடல்.
2-2-1956	:	தேவிகுளம், பீர்மேடு இணைப்புக்காகப் பொது வேலை நிறுத்தம்.
29-4-1957	:	தமிழ்நாடு, சட்டமன்றத் தி.மு.கழகத் தலைமை ஏற்று, எதிர்க்கட்சித் தலைவராதல்.
9-6-1957	:	'ஹோம் லேண்டு' ஆங்கிலக் கிழமை இதழ் தொடங்கல்.
3-1-1958	:	அண்ணா கைதாதல்.
2-3-1958	:	தி.மு.க. கழகத்தினை மாநிலக் கட்சியாகவும், உதயசூரியனை அதன் சின்னமாகவும் இந்திய அரசு ஒப்புதல் அளித்தல்.

24-4-1959	:	அண்ணாவின் தம்பியார் சென்னைப் பெருநகர் மன்ற ஆட்சிப் பொறுப்பினைப் பெறல்.
1-8-1960	:	இந்தி எதிர்ப்பு மாநாடு செங்கையில் அண்ணா தலைமை உரை நிகழ்த்தல்.
1962	:	'சம்பத்து' விலகல் குறித்து அண்ணா வருந்தி அறிக்கை வரைதல்.
26-2-1962	:	சட்டமன்றத்திற்குத் தம்பியர் ஐம்பதின்மர் செல்ல அண்ணா பாராளுமன்ற மேலவை உறுப்பினராதல்.
2-8-1962	:	விலைவாசி உயர்வுப் போர் - வேலூர்ச் சிறையில் பத்து வாரம்.
7-1-1963	:	சீனா போர் குறித்துச் சென்னை வானொலியில் ஆங்கிலப் பேருரை.
17-11-1963	:	கட்டாய இந்தி - 17ஆவது மொழிப் பிரிவு சட்டம் எரித்தல். 16-11-1963 அன்றே கைதாகி, ஆறு மாதம் சிறைத் தண்டனை ஏற்றல்.
1-3-1967	:	தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் தம்பியருடன் 138 பேர் அமர்ந்திட அண்ணா தமிழக முதல்வர் பொறுப்பேற்றல் (6-3-1967)
14-3-1967	:	முதலமைச்சர் அண்ணா வானொலிச் சொற் பொழிவு.
14-4-1967	:	'தமிழ்நாடு' பெயரிட்டுப் பெருமை தரல்.
10-1-1968	:	இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு எடுத்து உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் நிற்றல்.
8-9-1968	:	அண்ணாமலை பல்கலைக்கழகம் பேரறிஞர் அண்ணாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கிப் பெருமை பெறல்.
4-1-1969	:	கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் சிலைத் திறப்பு விழாவில் பொழிந்த கடைசிச் சிறப்புச் சொற்பொழிவு.
2-2-1969	:	தமிழ் மக்கள் பேரறிஞர் அண்ணா அவர்களை இழந்து துன்பக் கடலில் மூழ்கல்.

★ ★ ★

வர்ணாசிரமம்

"**பா**கனே! தேரை விரைவாகச் செலுத்து."

"நற்றிறம் வாய்ந்த பாகனே! தேர் விரைந்து செல்வதாக!"

"விரைந்து செல்லவேண்டும். அங்குதான்! அறியாயோ நீ? கேள்!"

"பைங்கிளியே! மழலை பல பேசவல்லாய் எனினும், நான் கேட்டுக் களித்திட ஒரே ஒரு சொல் கூறு; வேறு வேண்டிலேன். **அவர் இன்று வருவார்** என்றுரை. நம்மைப் பிரிந்து சென்றவர், இன்று வருவார் எனும் இன்சொல்லைக் கிளியே, நீ கூறு, என்று, தன் முன்கையில் அமர்ந்துள்ள தத்தையினைக் கேட்கும், என் கிளி மொழியாளின் இல்லத்திற்குச் சென்றாக வேண்டும் விரைவாக! நொந்த மனத்துடன் வெண்மதி நுதல் சுருங்கக், கிள்ளையுடன் பேசும் சொல்லினை வீட்டார் கேட்டிடுவரோ, என்று பயந்து, நாணி உரையாடுவாள் அந்நங்கை, தன் அங்கையில் கிளி ஏந்தி! அவள் துயர் துடைக்க, நாணம் நீக்க நான் செல்ல வேண்டும். நற்றிறம் படைத்த பாகனே! செலுத்துக தேரினை விரைந்து!! சிவந்த மாலையை யணிந்தது போன்ற கழுத்தினையுடைய அந்தப் பச்சைக் கிளி, பலப்பல பேசவல்லதுதான். எனினும் ஒரே ஒரு சொல் நீ உரைப்பாய், 'இன்று வரல் உரைமோ' என்று மட்டுமே கேட்கிறாள், என் மனத்தைக் கோயில் கொண்டாள்! என் செய்வாள்

ஏந்திழை? இல்லத்துள்ளோர் அறிந்திடுவாரோ, என்ற அச்சம்; அஞ்சுகத்தினிடம் அதிகம் பேச நேரமில்லை. நினைப்போ என் மாட்டுளது. அந்த நேரிழையாளின் மனை செல்ல, விரைவாகத் தேரை நீ செலுத்து! உனக்குதான் திறமை உண்டே! பாகா! செலுத்து! அந்த மனையின் கண்ணே, அகமகிழ்வுடன் அன்னங்கள் விளையாடு கின்றன; பெட்டையும் ஆணும் பெருமிதத் தோடு ஆடுகின்றன. தூய்மையான சிறகு, அந்த அன்னங் கட்கு வெண்மை, அழகான வெண்மை நிறச் சிறகுகள், பெரிய தோள்களையும் மெல்லிய விரல்களையும் உடைய, ஆடை ஒளிப்பவள், நீர்த்துறையிலே, ஆடையிலே தோய்ந்துள்ள கஞ்சிப் பசையினை அலசிவிடுவது கண்டுள்ளாயன்றோ! அது போன்ற நிறம், அன்னங்களின் சிறகுக்கு!! அவை ஆணோடு பெண் அளவளாவி, அக மகிழ்கின்றன! காதல் இன்பத்தை அவை நுகரக் கண்டு, என் அன்னம் பச்சைக்கிளியுடன் பேசுகிறாள், பாகனே! செலுத்துக தேரை விரைவில்! என் நெஞ்சமோ நோகிறது! காதலின் மேம்பாட்டைக் காதலின் பெருங்குணத்தை நான் கண்டேன் ஈண்டு. என் இச்சைக்கினியாளைப் பச்சைக் கிளியுடன் பேசி ஏங்கிட விட்டுப் பாவியேன் பரிதவித்தேன், தெளிந்த நீர் தழுவிச் செல்லும் மணற்கரையிலே, பெண்மான் படுத்துறங்கக் கனிவுடன் காவல்புரியும் ஆண்மானைக் கண்டேன். அதன் பெருந்தன்மையினைக் கண்டு எனது நெஞ்சம் தளர்ந்துளது. அறுகு அருந்தச் செய்து, அருவியோரத்தில் அழகுறத் தூங்கச் செய்து, ஆண்மான், துயிலும் தன் பெண்மானுக்குத் துணை நிற்பது கண்டேன்; துக்கம் நெஞ்சைத் துளைக்கிறது; என் துடியிடையாளை நான் தனியே தவிக்கவிட்டேன். அவள் தத்தையைக் கேட்கிறாள். 'இன்று அவர் வருவாரோ, கூறு' என்று. அந்த மனைக்கு விரைந்து சென்று, அவள் துயர்தீர்த்துத், தளர்ந்த என் நெஞ்சம் இன்பம் பெறச் செய்ய

வேண்டும். வேகமாகத் தேர்செலுத்தும் திறமையுடைய பாகனே! தேரை, விரைந்து செலுத்து!!''

வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகனுக்குரைத்தது, நான் மேலே தீட்டியிருப்பது **மதுரை மருதன் இளநாகனார்** எனும் புலவர் பெருமானின் மணிமொழியினைக் கொழித் தெடுத்துக் கோத்தேன், சிறு சொல்லாரம்.

தலைவியைப் பிரிந்து, தலைவன் சென்றான். தத்தளித்தான் தளிர்மேனியாள். தத்தையிடம் பேசித் தவித்துக் கிடந்தாள், சென்றவிடம் சிறப்புப் பெற்றுத் தேரிலே மீள்கிறான் தலைவன். மானினத்திடம் காதற் பாடம் காண்கிறான்; மங்கை நல்லாளை எண்ணி ஏங்குகிறான்; அவள் மனையிலேயும், அன்னங்கள் காதற் களியாட்டத்திலே ஈடுபட்டு உலவுமே என்பதை எண்ணினான், நாணமுடைய நங்கை, நெஞ்சிலேயுளதை வீட்டார் அறியக்கூடாதே என்றெண்ணி அஞ்சிப் பிரிந்து போன தலைவன் **வருவார்! இன்று வருவார்!** என்ற இன்சொலை எவரேனும் பேசிடக் கேட்டால் புண்ணாறும் என்று கருதிப் பேசிட ஓர் பைங்கிளியை எடுத்துத் தன் அங்கையில் ஏந்திப் பல பேசிச் சலசலப்புண்டாக்கி மனையுளோருக்குத் தன்னைக் கிளி காட்டிக் கொடுத்துவிடுமோ என்று அஞ்சி, 'கிளியே! **அவர் இன்று வருவார்** என்ற சொல்மட்டுமே உரைத்திடு,' என்று கேட்பாள், எனத் தலைவன் எண்ணி, வேகமாகத் தேரைச் செலுத்து, என்று தேர்ப்பாகனுக்குக் கூறுகிறான். அவனை ஊக்குவிக்கக் கருதிப்போலும், 'நற்றிறம்படைத்த பாகனே' என்றும் அவனைப் புகழ்கிறான். காதற் பாதையைக் கவி இளநாகனார் கன்னித் தமிழிலே, கவிதையாக்கிக் கூறியுள்ளார், அகநானூறு எனும் அருந்தமிழ் நூலிலே!

அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே, பட்டமளிப்பு விழாவிலே, அண்ணல் **சர். சண்முகம்** ஆற்றிய,

அழகிய, அரிய, சொற்பொழிவினைப் படித்ததும் எனக்கு இந்தச் செந்தமிழ்ச் செய்யுள் நினைவிலே நர்த்தனமாடிற்று.

"பரதா! சர் சண்முகத்தின் வீரவுரை படித்த உனக்கு விரகதாபச் **செய்யுள்** நினைவிற்கு வருவானேன்! தமிழ்க் கலையின் உயர்வுபற்றிச், சேர நாட்டாட்சியினைச் சில ஆண்டுகள் நடத்திய சண்முகம் செப்பினாரே, இதுபற்றி, ஏடு விரித்து எடுத்தாயோ இன்சுவையை,'' என்று கேட்பீர்கள். இல்லை தோழர்களே! கன்னித் தமிழின் கருவூலத்தைத் தேடியல்ல. நான் அக்கவிதையைக் கண்டது. என் நெஞ்சத்திரை முன்னே, இருகாட்சிகள் ஒரே சமயத்திலே நின்றன. ஒன்று சர் சண்முகம், அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே, அறிவாளிகள் சுவைக்க, மாணவர் மகிழக், கம்பீரமாக நின்று, சொற்பெருக்காற்றிய காட்சி; மற்றொன்று, தேரிலே தலைவன், அவன் உரை கேட்கும் பாகன், வரவு நோக்கி வாடிடும் தலைவி, எனும் காட்சி; இரண்டு நின்றன!

"தேறியோருக்குத் தெளிவுரையாற்றும், சர் சண்முகத்தையும், தேரிலே அமர்ந்து பாகனை விரைந்து செலுத்தச் சொன்ன தலைவனையும், ஒருங்கே கண்டது ஏன்?'' என்பீர். கண்டேன், இதோ உம்மிடம் கூறிடுவேன்; காரணம் சரியா, என்பதனை முடிவு செய்யும் கடமை, எனதன்று, உமதே!

சர் சண்முகம், தென்னாட்டுத் தாகூர், இந்தியாவின் கிளாட்ஸ்டன், என்று புகழ இழிமனமற்ற எவரும் தயங்கார்! அவருடைய அரசியல் அறிவும், தரணியறிந்த தன்மையும், தளராத் திறனும், நிருவாக நேர்மையும், எவருமறிவர்! திராவிடமணி - மாசு இல்லை! தமிழகத்தின் நிலவு - வளர்பிறை! உன்னதமான ஊற்று, அவருடைய ஆற்றல்! ஆம், சர் சண்முகம், ஏடெடுப்போரின் மொழிமாலையைச் சூடிட வேண்டிய பருவத்தைக் கடந்துவிட்ட காவலர்.

கொங்குபுகழ்க் கோமான் மட்டுமல்ல. மங்காப் புகழைத் தமிழ் மாநிலமும், அதை அடுத்த தரணி பலவும் பரப்பி அரச அவையிலும், அறிஞர் சபையிலும், களத்திலும் கொலு மண்டபத்திலும், எங்கும் புகழ்பெற்று விளங்கும் ஆற்றலரசர். ஆயினும், அவரைத் தென்னாட்டுத் தாகூர் என்று கூறேன்! ஏன் கூறல் வேண்டும்? இவர், எந்நாட்டு வீரர், தமிழகத்தின் தளபதி, தாகூருக்கு வங்கத்திலே, பங்கம் விளைவிக்கக் கொடுங்கையில் வஞ்சனை வாளேந்தினோர் எவருமில்லை! தாகூரின் நாதநடையினைக் கண்டதும், சங்கை கொண்டோர், வங்கத்திலே இல்லை! அவர் மொழி, வங்கமக்கள் எவரின் விழியிலும் களிப்புத் துளி எழச் செய்ததேயன்றி, காய்ச்சலும் குளறலும் எழச் செய்ய வில்லை. வங்கம் தாகூரை, உச்சிமோந்து முத்தமிட்டு, வாரி அணைத்து வாஞ்சனையுடன் கொஞ்சிற்று. இங்கோ? எவ்வளவு எதிர்ப்பு, எத்துணை வஞ்சனை, எவ்விதமான சதிகள்! பழி எத்துணை, பதைப்பு எவ்வளவு! சிங்கமென முழக்கமிட்ட சண்முகத்தைச் சீறிக் கடிக்கச் சென்ற செந்நாய்க் கூட்டமும், பாய்ந்து பிடுங்கச் சென்ற ஓநாய்களும், நகைமுகங் காட்டி பகைச் செயல் புரிந்த நரிக்கூட்டமும், கொஞ்சமா? தாகூரை உயர்த்திடக் கண்டோம். தமிழகத்திலோ, சர் சண்முகத்தைச் சாணக்கியர்களும் குடிலர்களும் சாய்த்திட ஜல்லடம் கட்டியதையும், சரங்கள் பல தொடுத்ததையும் கண்டோம். வங்கத்தின் அணைப்பிலே கவி தாகூர் வளர்ந்தார்! தமிழகத்திலே தருக்கரின் எதிர்ப்பிலே, தழைத்தது கொங்குநாட்டு வேங்கை! தாகூர் மாசுமறுவற்ற வானத்திலே உலவிய முழுமதி; சர் சண்முகம், முகிலைக் கிழித்தெறிந்த முழுமதி! இத்தமிழரைக் கவியுடன் ஒப்பிட நான் ஒப்பேன்!

கண்டனங்கள் எழுதி அலுத்த கரங்களும், கேலிப் படங்கள் வரைந்து அலுத்த பேனா முனைகளும், சபித்துச்

சலித்துப்போன திருவாய்களும், கனல்கக்கிக் கருகிப்போன விழிகளும், சுருக்குக் கயிறு வீசிச் சோர்ந்துபோன வலைவீசிகளும், படுகுழி வெட்டி ஆயாசமடைந்த அரசியல் வெட்டியான்களும் இன்று சர் சண்முகம் அறிஞர் உலகிலே அரசு ஓச்சக்கண்டு, அயர்கின்றனர். ஒரு காலத்திலோ! ஏ, அப்பா! எவ்வளவு கேலி கிண்டல், என்னென்ன வசவுகள்! இவ்வளவுக்கு மிடையே பூத்தமலர், அதனை, வளமிகுந்த வங்கத்திலே வாஞ்சனை எனும் நீர் பெய்து வளர்த்த தாகூரெனும் மலருடன், ஏன் ஒப்பிட வேண்டும்? சர் சண்முகம், தமிழர்; பண்டைத் தமிழரை, தமிழ் வீரரை நினைவூட்டும் தமிழர், வேறு உவமைகள் ஏன்?

அவர் அன்று ஆற்றிய அறவுரை, அகநானூற்றுக் கவியை, எனக்கு நினைப்பூட்டுவானேன், என்று மீண்டும் கேட்பீர். நான் கூறுமுன்னர், நீவிர் சற்று எண்ணிப் பாருமின்.

இந்தத் திங்கள், பல்வேறு இடங்களிலே பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன. டாக்டர் ஜெயகர், பேராசிரியர் ஜா, பண்டித குன்சுரு முதலிய அறிஞர் பலர், வட நாட்டிலே, பட்டமளிப்பு விழாச் சொற்பெருக்காற்றினார்கள். படிப்பிலும் பாராளுந் திறனிலும், மேலானவர்களான இம்மேதாவிகள், தேசிய சர்க்காரின் அவசியத்தைப் பற்றியே பெரிதும் வலியுறுத்திப் பேசினர். தேசியம், ஏன் இங்குச் சரியான முறையிலே கமழவில்லை என்ற ஆராய்ச்சியிலேயே அவர்கள் புகவில்லை. ஏகாதிபத்தியத்தைக் கண்டிப்பது எளிது; கண்டிக்க வேண்டிய அளவு கசப்பு வளர்ந்துவிட்டதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் கண்டனத்தோடு நின்றுவிடாமல், நோய் போக எம்மருந்து உட்கொள்வ தென்றுரைக்கும் நேர்மையும், நெஞ்சமுத்தமும், அந்தப் படிப்பாளிகட்கு இல்லையோ என்று அஞ்ச வேண்டி

இருக்கிறது. சர் சண்முகம், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைச் சாடினார், சர்ச்சிலுக்குச் சூடெழ, அமெரிக்க அழுகை கிளம்பக் கூடிய விதத்திலே! "தன்மானம் உண்டு எனக்கு! எனவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலே நமக்கிருக்கும் அந்தஸ்துக் குறித்து மகிழ முடியாது. நான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் புகழ் பாட முடியாது. எந்த ஆப்பிரிக்க மண்ணிலே என் இனத்தவரின் இரத்தம் போரிலே சிந்தப்படுகிறதோ, அதே ஆப்பிரிக்காவிலேயே அவர்கள் அவமதிக்கப்படுவதைக் கண்டும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துக்கு லாலி பாட மனம் வருமோ! மனம் முறிந்துவிட்டது அன்பர்களே!'' என்று சர் சண்முகம் கூறியிருப்பது கேட்டு, அறிவும் தன்மானமும் உள்ள எவர்தாம், 'சபாஷ்!' என்று கூறார்? ஆனால், இந்தப் பகுதி எனக்குப் புளகாங்கித மூட்டவில்லை. ஏனெனில், கண்ணியத்துடனும், காரணத்துடனும், கம்பீரமாகச் சர் சண்முகம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் போக்கைக் கண்டித்தார்.

ஆனால், இதனினும் கடுமையாகவும், நரகல் நடையில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் போக்கைக் கண்டிக்கத் தேசியத் திருக்கூட்டத்திலே பலருண்டு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சின்னாபின்னமாக்குவேன் என்று சினந்து சூள் உரைத்தோரையும், அதன் பிடரியைப் பிடித்துக் குலுக்குவேன் என்று முழக்கமிட்டோரையும் நாடு கண்டிருக்கிறது. எனக்குத் தெரிய, ஒரு தேசியப் பிரசங்கியார் (இன்று அவர் இந்து மகாசபை வீரராக வேடமெடுத்துள்ளார்) ஒரு முறை பிரிட்டனைக் கண்டித்துப் பேசுகையிலே கூறினார், "மகாஜனங்களே! பிரிட்டனிலே என்ன இருக்கிறது என்று எண்ணுகிறீர்கள்? வெறும் சுண்ணாம்பும், நிலக்கரியும்! நிலக்கரிக்காகச் சுரங்கங்கள் தோண்டித் தோண்டி பிரிட்டன் பாழாகி விட்டது. முப்பது கோடி இந்தியரும் (அன்றைய ஜனத்

தொகை 30 கோடி) சேர்ந்து மூச்சுவிட்டால், ஆடிக் காற்றிலே சிக்கிய இலவம் பஞ்செனப் போகும்.'' இந்த உரைகேட்ட வீரர் குழாம் கைகொட்டி ஆரவாரித்ததும், எனக்குத் தெரியும். ஆகவே, நான், சர் சண்முகம் அவர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கண்டித்துப் பேசியதை மாபெரும் வீரம் என்று கூறவில்லை, 1920-லே அம்மொழி வீரமாக இருந்திருக்கலாம்; இன்றோ! அம்மொழி பழங்கஞ்சி. வீட்டுக்கு வீடு, கலயத்திலே அது உளது! இந்நாட்டுச் சொற்பொழிவாளரின் அரிச்சுவடியே அதுவாக இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியல்ல எனக்கு ஆனந்த மூட்டியது.

நாட்டு விடுதலை பற்றிப் பேசிடாத தலைவர் இல்லை. ஆனால், அந்த விடுதலை கிட்டாததன் காரணம் என்ன என்று உசாவிடுவோர் வெகு சிலரே. உண்மை தெரிந்த பின், அதனைத் தைரியமாகக் கூறிடுவோர் அதனினும் மிகச் சிலரே, உரைத்ததோடு அமையாமல், உறுதியுடன் நின்று பணி புரிவோர் அதனினும் மிகமிகச் சிலரே. அன்னிய நாட்டினரை மிரட்டவோ, மயக்கவோ, இங்கு ஆள்கள் அனேகர். ஆனால், இங்கு விடுதலைக்கு விரோதிகளாக உள்ளவர்களைச், "சற்றே விலகு'' என்று கூறும் ஆண்மையாளர் மிகக் குறைவு.

சர் சண்முகத்தின் பேருரையிலே, ஆண்மை ததும்புகிறது; அதனைக் கண்டே நான் களிப்படைகிறேன். "நம்மை ஆளும் அயல் நாட்டாரின் வாக்குறுதிகளினாலோ, நல்ல எண்ணத்தினாலோ, நாட்டு விடுதலை கிடைத்து விடுமா? கிடைத்துவிடாது!'' என்று கூறுகிறார் சர் சண்முகம். சுதந்திரம் சீமையிலே தயாரிக்கப்படும் சரக்கல்ல, சன்மானமாகப் பெற! அது நாட்டு மக்களின் நாடி முறுக்கினால் விளையக்கூடிய நிலை, அதனை இங்கேயே தான் பயிரிட முடியும். ஆனால், அந்த வயலிலே, கள்ளி

படர்ந்திருக்கிறது. அதனைக் களையா முன்னம், பயிர் இல்லை, பண்பு இல்லை, நாட்டு நலிவு போக்கும் பச்சிலை இல்லை. இதனைச் சர் சண்முகம் அஞ்சா நெஞ்சுடன் அறைவது கேண்மின்:

"இந்நாட்டிலே, அதிர்ப்தியும், துவேஷமும் அதிகரித்துளது. இது வருந்தத் தக்கது. ஆனால், இதற்குக் காரணம் என்ன? இங்கு ஒரு கூட்டம், தனது நோக்கமும் கலையுமே பிரதானமென்று கூறி, மற்ற மக்கள் மீது அவற்றைத் திணித்தது. அதன் பலனாகவே கேடு பல தோன்றின. தேசியத்தின் பெயரால் அக்கூட்டம், மற்றவர்களை அடக்கித் தன் அதிகாரத்தையும் செல்வாக்கையும் ஸ்திரப்படுத்த முயற்சிக்கிறது."

இந்தப் பொன்மொழியை ஆராய்ந்து பாருங்கள். இந்த உபகண்டத்தின் வரலாறுகளிலே புதைந்து கிடக்கும் உண்மைகளை உணருங்கள். அந்த ஒரு கூட்டத்தின் செருக்கு எவ்வளவு! அது அழித்த அரசுகள் எத்தனை! அதன் வயப்பட்டு அழிந்த வீரர்கள் எவ்வளவு! இறுமாப்புடன், அக்கூட்டம் தனது "தாசராக" மற்றவரை மாற்றிய கொடுமையை எண்ணிப் பாருங்கள், அப்போதுதான் அறிஞர் சண்முகத்தின் அறவுரையின் அழகு புலனாகும். இதோ வெளிப்படையாகவே வீரர் சண்முகம் விளம்புகிறார், கேளுங்கள்:

"இந்தியாவிலே வர்ணாசிரமம் ஏற்பட்டதனால், ஆளும் ஜாதி தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டு, ஏகபோக உரிமையாக அந்த அதிகாரத்தை அனுபவித்து வருகிறது. இந்த வகுப்பு, தனது ஏகபோக உரிமையையும் பேராசையையும் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாகக் கைவிடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு துரிதமாக இந்தியாவுக்குச் சுதந்திரமும் ஜனநாயகமும் ஏற்படும்."

விடுதலை வீரர்களே! ஆசிரம அரசியலிலே அருச்சகராக உள்ள அருமைத் தோழர்களே! ஆகாத திட்டத்தைச் சுமந்துகொண்டு ஆமைவேகத்திலே செல்லும் அந்தணரின் அடிவருடிகளே! நாட்டை மீட்டிட நானாவிதமான முயற்சிகள் செய்தீர், அலுத்தீர், முடக்குவாத நோயால் வாடுகிறீர். இதுகாறும் செய்த பல, வெற்றி தரக்காணோம். வீணருக்கு அரசியலிலே உறைவிடமும், சுயநலமிகளுக்குச் சமுதாயத்திலே புகலிடமும் தரவே, உமது தொண்டு பயன்பட்டது. இதோ எமது தலைவர் இயம்பிடும் திட்டத்தைப் பற்றி யோசியுங்கள், விடுதலைப் பாதையை அடைத்துக் கொண்டுள்ள மமதையாளர்களை, மட்டந்தட்ட முன் வாருங்கள். பாருங்கள் பிறகு, பரிதிபோல் விடுதலை தோன்றிடக் காண்பீர். சர் சண்முகம் ஏகபோக மிராசு பாத்தியதை அனுபவிக்கும் கூட்டத்திற்கு நன்னெறி புகல்கிறார். பேராசையை ஒழிமின்! எல்லாம் எமக்கே எனும் இறுமாப்பை நீக்குமின்! என்று இதோபதேசம் புரிகிறார். காடியிலே பன்னீர் தெளித்துப் பயனென்ன என்பீர். ஆம்! இதோபதேசத்தோடு நின்றுவிடவில்லை. இளங்கோ மன்றத்திலே இருந்தாண்ட வீரர். தாங்களாகப் பேராசையை விடவில்லையானால், என்ன நேரிடும்? இந்த நிலை இப்படியே, என்றென்றும் நீடித்திருக்கும் என்று மனப்பால் குடிக்க வேண்டாம். **ஜனநாயக வேகம் இந்தக் கூட்டத்தின் கொட்டத்தை ஒழித்து விடும்** என்ற உண்மையை உரைத்திருக்கிறார். ஆம்! இது சரிதங்கண்ட உண்மை. கிரேக்க நாட்டு ஹெலாட் (Helot) பலகாலம் அடக்கி வைத்திருந்த ஆண்டைக் கூட்டம் (Masters) அழிந்து போனது சரிதம்! ரோம் நாட்டு பிளபியன் (Plebian) பெட்ரீஷியன் (Patrician) தகராறின் முடிவு என்ன? ஆதிக்கம் செலுத்திய கூட்டம் அழிக்கப்பட்டுவிட்டது. பிரிட்டனிலே காமன்ஸ் (Commons) பிரபுக்கள் (Lords) தகராறின் முடிவு என்ன? பிரபுக்கள் பெட்டிப் பாம்பு ஆனதுதானே!

ஆண்டவனால் ஆளப் பிறப்பிக்கப்பட்டவன் என்று ஆணவமாகப் பேசி (Divine Right of Kings) கடவுட் புதல்வர்கள் என்று தத்துவத்தைப் பேசிய, முதலாம் சார்லஸ் மன்னனின் முடியும் முடிதரித்த சிரமும் என்ன ஆயிற்று ரஷ்ய நாட்டிலே? முதலாளி (பூர்ஷுவா) தொழிலாளி (புரோலேடேரியன்) போர்மூண்டதன் பலன் என்ன? இங்கு மட்டும் என்ன? ஆரிய - திராவிடப் போர் மூண்டுவிட்டது. சரிதமுணர்ந்தோரின் உள்ளத்திலே, இதன் முடிவு என்னவாக இருக்கும், என்று தெரியும்! குடிலர்கள் கெடுவர்! சழக்கர் சாய்வர்! இத்தகைய வீர உரையாற்றிய சர் சண்முகத்தைப் பாராட்டுவதோடு நின்றுவிடக்கூடாது. எந்த ஏகபோக மிராசு ஒழிக்கப்பட வேண்டும் என்று சர் சண்முகம் கூறினாரோ, எந்த வர்ணாசிரமம் ஒழிய வேண்டும் என்று அவர் கூறினாரோ, அதனை ஒழிக்க மாணவர்கள் முயல வேண்டும், முனைய வேண்டும். இல்லையேல், அவர் மொழி கேட்டு யாது பயன்!

"எல்லாம் சரி, பரதா! நாங்களும் சர் சண்முகத்தின் பேருரை கேட்டுப் பூரித்தோம். ஆதிக்கம் செலுத்தும் இனம் பிரமித்தது. ஆனால், அவருடைய சொற்பொழிவுக்கும், உனக்கு அகநானூற்றுச் செய்யுள் நினைவிற்கு வந்ததற்கும் என்ன சம்பந்தம் என்பது தெரியக் காணோமே'' என்றே அன்பர்கள் கேட்பர்.

தோழர்களே! சர் சண்முகம் தமது சொற்பொழிவின் இறுதியிலே, "வர்ணாசிரமம் ஒழிய வேண்டும்! ஒரு இன ஆதிக்கம் அழிய வேண்டும்! ஏகபோக உரிமை மடிய வேண்டும்! பேராசைப் பித்தம் போக வேண்டும்!'' என்று முழக்கமிட்டாரே, அந்தப் பகுதி என் செவிக்கு, "தேரை விரைவாகச் செலுத்துவாய் பாகனே!'' என்று தலைவன் கூறும் செய்யுள் போன்றிருந்தது. சர் சண்முகம், வர்ணாசிரம ஒழிப்புக்காகவே வாழும் கட்சியை விட்டுப்

பிரிந்து, வேறு வினையில் ஈடுபட்டு, நெடுநாள்கள் பிரிந்திருந்தார். அவர் பிரிய நேரிட்டதால் திராவிடக் கட்சி தவித்துக் கிடக்கிறது. காவல் மிகுந்த மனையிலே கன்னி நிற்பது போல, வினைமுற்றிய தலைவன், விரைந்து சென்று தலைவியின் துயர் தீர்த்தல்போல சர் சண்முகம், தன் நெஞ்சமெனும் பாகனுக்குத் தேரை விரைந்து செலுத்து எனக் கூறுமாறு வேண்டுகிறோம். துயிலும் பெண்மானருகே ஆண்மான் நின்று காவல்புரிவது போல, ஆரியரிலே தலைவர்கள், ஆரிய இனத்தைத் தமிழ்ப் பண்ணையிலே மேயவிட்டுத், தமிழ்வளம் நீர் பெருகச் செய்து, உல்லாச வாழ்வு எனும் வெண்மணலிலே படுத்துறங்கச் செய்து, காவல்புரிவதை சர் சண்முகம் காணவில்லையா! சங்கராச்சாரி கோலத்திலும் சரி சர்க்கார் நிருவாகியெனும் கோலத்திலும் சரியே, ஆரிய இனத் தலைவர்கள் ஆரிய இனத்தின் சுகமொன்றே குறிக்கோளாகக் கொண்டு உழைப்பது சர் சண்முகத்துக்குத் தெரியாதா? மானினம் காதல் மேம்பாட்டைத் தலைவனுக்குரைப்பது போல, இக்காட்சிகள், சர் சண்முகத்துக்குத் திராவிட இனத்திடம் அவர் காட்ட வேண்டிய அன்பின் பெருக்கை உணர்த்தவில்லையா! ஆமெனில், தேரை விரைவாகச் செலுத்துக என்றுரைக்கத் தானே வேண்டும்.

திராவிடமணியை, பண்டைப் பெருமை வாய்ந்த தில்லியில் ஜொலித்திடவும், சேர நாட்டிலே ஒளிவிடவும், இன்னும் எத்தனை நாள்களுக்குத்தான், வேறு எவரெவ ருக்கோ, ‘இரவல்’ தந்தவண்ணமிருப்பது? திராவிடச் செல்வத்தை ஓமானுக்குப் பலியிட்டோம் அதன் பாழும் பசியடங்க! திராவிடத் திருவிளக்கு (சர் இராமசாமியை) வைசிராய் மாளிகைக்கு ஒளி தர “இரவல்” அளித் துள்ளோம். திராவிடமணி சர் சண்முகம் தேரை

விரைவாகச் செலுத்தித் தமது காதலகத்தை நோக்கிவரத் தாமதித்தால், திராவிடத்தைக் கப்பிக் கொண்டுள்ள காரிருள் நீங்கிட வழிகாணோமே என்றே நான் திகைக்கிறேன். எனவே, சர் சண்முகம் எந்த வர்ணாசிரமம் ஒழிந்தால் மட்டுமே, நாடு மீளும் என்று கூறினாரோ, அந்த வர்ணாசிரம ஒழிப்பையே, வாழ்க்கை இலட்சியமாகக் கொண்ட திராவிடக் கட்சியிலே, இன்றே பங்கு எடுத்துக்கொண்டு பணிபுரிய வேண்டுகிறோம். இன்று அதன் பாரத்தைச் சுமந்து, பெரியார் உடல்தளர்ந்து, நோய்வாய்ப்பட்டு, படுத்தவண்ணம் பல எண்ணிச் சில மட்டுமே வெளியே கூறிச் சோதித்தவண்ணமிருக்கிறார். வைத்தியர்கள் மருந்தூட்டுகின்றனர். கட்சியோ அவருக்கு நோயூட்டுகிறது, ஓய்வு இல்லை; மனநிம்மதி இல்லை. ஒன்றா இரண்டா அவருக்குள்ள தொல்லைகள். உண்மை யிலேயே, வாலிபமும் வீரமும் அறிவும் ஆற்றலுமிக்க, சர் சண்முகம் போன்றவர்கள், கட்சியிலே பணிபுரியாதிருப்பது கண்டு அவர் மனம் நோகாதா என்று கேட்கிறேன். கிளைகளை ஒடித்தெடுத்துவிட்டால், மரத்திற்குதான் என்ன அழகு? ரோஜாவைப் பறித்துக் கொண்டு, செடியிலே முள்ளைமட்டும் வைத்திருப்பதுபோலப், பதவியும் சுகவாழ்வும், பலரைப் பறித்துக்கொண்டு போக, சுயநலமிகளும் சொல்லம்பரும் ஒரு கட்சியிலே இருந்து பயன் யாது?

சர் சண்முகம், அமெரிக்கா சென்று திரும்பி எவ்வளவு காலமாயிற்று! ஈரோடு மகாநாட்டிலே முன்னர்க் கொச்சித் திவானாக இருந்த காலை, சர் சண்முகம், வந்திருந்தார். "இன்று நம்மிடை ஓர் விருந்தாளி வந்திருக்கிறார்'' என்று பெரியார் உரைத்தார். அதற்குச் சர் சண்முகம் விடுத்த பதிலின் போது, அவர் மனம், முகத்திலே தாண்டவமாடக் கண்டேன். "வந்திருப்பது விருந்தாளியல்ல, (குடும்பத்து

மகன்) வேற்றூர் சென்று வாழுபவன், விழா நாளன்று வீடு வந்திருக்கிறான், குடும்பத்தினருடன் கூடிக் குலவ, களித்து இருக்க, கனிவுடன் பேச'' - என்று சர். சண்முகம் கூறினார். அஃதன்றோ தமிழ்ப் பண்பு, அதனையன்றோ நாம் விரும்புவோம்! ஆனால், அமெரிக்கா சென்று திரும்பிய பிறகு, இதுவரை (இடையே ஒரு நாள் கன்னிமாரா ஓட்டலிலே பேசினது தவிர) சர். சண்முகம், குடும்பத் தாரைக் கண்டு குசலம் விசாரித்திருக்கக் கூடாதா, கூடிப் பேசிக் குலவிடலாகாதா, தள்ளாடும்போது கைகொடுத் திருக்கலாகாதா, தன் ஆற்றலெனும் செல்வத்தைத் தந்திருக்கக்கூடாதா? ஏன் அதைச் செய்ய தவறினார்? பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதா! குடும்பத்தின் உயர்வு தாழ்வு பற்றிக் கருதிடாத உதவா மகனா அவர்! இதுவே, என்னை வாட்டிவதைப்பது. இசைச் செல்வத்தை வளர்த் திடவும், கலைச் செல்வத்தைக் கண்டு களிக்கவும், சர் சண்முகம் ஓயவில்லை. ஆனால், குடும்பத்தையே மறந்தார். எனவே, அவருடைய நெஞ்சமெனும் பாகனுக்கு இனியேனும், தேரை விரைந்து செலுத்து என்று அவர் கூறாரா, என்றோர் ஆவல் என் மனத்தைப் பிய்த்தது.

இலட்சியத்துக்காகவும், அந்த இலட்சியத்தை அடைய உதவும் கருவி போன்ற கட்சிக்காகவும், சொந்த நலனையும், உயர் பதவியையும் வெறுத்து ஒதுக்கும் வீரமும், கஷ்டநஷ்டம் ஏற்கும் சகிப்புத் தன்மையும் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால், அவரைத் தலைவராகக் கொண்ட கட்சியும் அதனைச் சார்ந்துள்ள மக்களும் முன்னேற்ற மடைய முடியுமென்பது திண்ணம். அரண்மனை மாடியிலே அம்ச தூளிகா மஞ்சத்திலே அமர்ந்துள்ள அரிவையை அடைய வேண்டி, ஆங்குச் சென்ற ஆணழகன், அகழியின் ஆழத்துக்கோ அதிலே அலையும் முதலையின் வாய்க்கோ அஞ்சினால், எங்ஙனம் மங்கையைப் பெற

முடியும்? இலட்சியமெனும் எழிலுடையாளைப் பெற்று இன்புற எண்ணுவோரிற் பலர், அகழிக்கு அஞ்சி, புறத்தே நின்று புகைபடு மனத்துடன் போரிட்டுக் கொண்டோ, புலம்பியோ கிடப்பர், ஒரு சிலருக்கே, உழவுக்கேற்ற விளைவு எனும் மொழி வழி நடக்கும் அறிவாற்றலுண்டு. அவர்தமைச் சலிப்பு அண்டாது. சாகசத்துக்கு அவர் பலியாகார். போலியைக் கண்டு ஏமாறார். புல்லரின் புன்மொழி கேட்டுப் புழுங்கார். தாக்கிய வேலினைத் தூக்கியெறிந்து விட்டுப், போர்க்குப் புகின் யார்க்கும் இது நேரல் முறையே என்பது தெரிந்து, புலியுடன் போரிடுகையிலே கிலி, எனும் வலிகொளல் கூடாது என்பதறிந்து, உயிர் கெடும்வரை, நெடுவரைபோல் நின்று போரிடுவர் வீரர். கட்சிப் பணியும், களத்துப்பணி போன்றே வீரருக்கு ஏற்றதேயன்றி விலாவிலே விரக்திப் புழு நடமாடுவோருக்கோ, மனத்திலே சுயநலமெனும் குளவி கொட்டிடுவோருக்கோ ஏற்றதன்று. சிறு செயல் புரிய மட்டுமே தெரிந்தோருக்குப் பெருநெறி பிடித்தலரிது. கட்சிப் பணிக்கு இத்தகைய கடமையுணர்ந்த காவலர் தேவை. அதிலும் தூக்கிடும் இனத்தைத் தட்டி எழுப்பிடும் பணி, சாமான்யமானதன்று. நான், சர் சண்முகம் அவர்களை இப்பணி புரிய முன்வரவேண்டுமென்றுதான் அழைக்கிறேன். **அரசோச்ச அல்ல!** அதற்கு ஆயிரம் ஆள்கள், நான் நீ என்று போட்டியிட்டுக்கொண்டு முன்வருவர் என்பது எனக்குத் தெரியும். பாணரையும் பாடினிகளையும் முன் அனுப்பிப் பரிசும் ஈந்து, பட்டம் பெற முயலும் பேர்வழிகள் பலருண்டு மரம் பழுத்தால் வெளவாலை வாவெனக் கூவி அழைப்பானேன்! "போ''வெனத் துரத்தவே, ஆள்கள் வேண்டும். நான், சர் சண்முகத்திற்கு அனுப்பும் அழைப்பு, **அரசோச்ச அல்ல-அரசு அமைக்க!!** இரண்டுக்குமிடையே உள்ள வித்தியாசம் பெரிது. நாவாயில் செல்ல அழைப்பதற்கும், நாவாய் கட்டிச்

செலுத்துமாறு கூறுவதற்கும் உள்ள வித்தியாசம் போன்றது. சர் சண்முகத்தின் ஆற்றல், அரசாள்வதன் மூலமாக விளங்குவது எளிது: ஆனால் அரசு அமைப்பதன் மூலம் அவர் ஆற்றலின் சிகரம் காண்போம்! கரியைக் கொண்டு கரும்பு பறிக்கச் செய்வதா? மலை மரங்களையன்றோ முறித்திடச் செய்ய வேண்டும்! வேங்கையை அழைத்து விளாங்கனியை ஒடித்திடச் செய்வதா! சர் சண்முகத்தின் அறிவாற்றலுக் கேற்ற காரியம், **அரசாள்வதல்ல - அரசு அமைப்பது!** அவர் ஆண்ட கொச்சியிலே, சின்னாட்கள் மிஸ்டர் டிக்சன் எனும் முன்னாள் சேலம் கலெக்டரன்றோ அரசாண்டார்! கொச்சியோ, வேறு எந்தச் சீமையோ, ஆள்வது, கொங்கு வேங்கையின் தீரத்திற்குச் சரியான வேலை கொடுப்பதாகாது.

மாசிடோனியா (Macedonia) மன்னன் பிலிப், தன் மகனுக்கு, அரணும் அழகும் அமைந்த அரசைத் தந்து சென்றான். மகன் அந்த மண்டல முடிதரித்து மட்டுமே ஆண்டிருப்பின், அவன் புகழ் மங்கியிருக்கும். இங்கும்எங்கும், இன்றும் என்றும் அவன் புகழ் எவரும் படித்து இன்புறுமாறு, அவன் தன் நிலையைச் செய்து கொண்டான்! யாங்ஙனம்? தந்தை தந்த தரணியுடன் அமைந்தானில்லை. **"அவன் மகன், இவன்" எனும் சொல் போய், 'இவன் தந்தை அவன்' எனும் மொழி தோன்றுமாறு, அவன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டான்.** அஃது என்னையெனில், பிலிப் தந்த மாசிடோனியா நாட்டு எல்லையிலே நின்றுவிடாது, **அலெக்சாண்டர்** காற்றெனச் சுழன்று களம் பல கண்டு, நாடு பல வென்று, நானிலம் புகழ, இன்னும் வரலாற்றின் மூலம், வாகையுடன் வாழ்கின்றான்.

"பொன் மூட்டையினைக் கழுதையின் முதுகிலே ஏற்றி, அக்கழுதையை அனுப்பினால், அது பிடித்துவிடும் ஒரு பட்டினத்தை!'' என்றுரைத்தானாம் பிலிப். அதாவது,

இலஞ்ச இலாவண்யம் கொடுத்து எந்த இலங்கையையும் பிடித்துவிடலாம் என்றான் - எங்கும் விபீஷணர் கிடைப்பர் என்ற காரணத்தால்! அலெக்சாண்டரோ, பொன்கொண்டு போனானில்லை, போருக்குப் போனான்; புகழொடு திரும்பினான்; தன் உயிரைப் பணயமாக வைத்து வீர விளையாட்டாடினான், வேந்தர்க்கழகு வேலியாளுதல், வீரர்க்கழகு வேலி கோலுதல் என்ற உரைக்கேற்ப, மாசிடோனியாவை மட்டுமே அலெக்சாண்டர் ஆண்டிருப்பின், கிரேக்க நாட்டிலேயோ, அதை ஒட்டிய நாட்டிலேயோ மட்டுமே அவன் பெயரை மாசிடோனிய மன்னருள் ஒருவன் என்ற பட்டியிலே படிப்பர்; உலகு அவனை அறிந்திராது. இன்றோ! உலகு அறியும். உலகில் பலப்பல அழியும், அவன் புகழோ நிலைத்து நிற்கும்! அரசு ஆள்வதற்கும், அரசு அமைப்பதற்கும், வித்தியாசம் என்னை எனில், பிலிப்பின் மகனாக வாழ்வதற்கும் அலெக்சாண்ட ராகத் திகழ்வதற்கும் உள்ள வித்தியாசமென்பேன்! சர் சண்முகத்தை, நான், அவர் ஆற்றலறிந்தே அரசாள அழைக்காமல், அரசு அமைக்க அழைக்கிறேன். மரத்தில் பழங்குலுங்கும் வேளையிலே மந்தி தாவுமானாலும், கனியுதிரும்! அதுபோலக் கட்சி கனியுந் தறுவாயிலே, கடுவனோ-மந்தியோ களித்துக் கூத்தாடும், கனி கிடைக்குமெனும் கருத்தினால். ஆனால், தோட்டம் அமைத்துத் துரவு எடுத்து, நீர் பாய்ச்சித் தரு வளர்த்திடும் செயலே முக்கியமானது. சர் சண்முகத்தை நானழைப்பது தீஞ்சுவை தரும் பதவிப் பலாவைப்பறித்திட அல்ல; அதற்குக் கீச்சிடும் கடுவன்களும், மையலூட்டும் மந்திகளும் என்றுமுண்டு, திராவிடத் தனி அரசு அமைக்க, வெறும் பதவியில் அமரவல்ல.

சர் சண்முகம் அவர்களைத் தலைவராக்கும் பணியினைத்தான் வேறு சிலர் மேற்கொண்டுள்ளனரே,

பயமேன் உனக்கு என்று கூறுவீர்கள். உண்மையிலே வேறு சிலர் வேண்டி அழைக்க வேண்டிய அளவு, சர் சண்முகம் தூரவிலகி நிற்கலாமா, நிற்கிறாரா நிற்பது ஏன் என்ற கவலை எனக்கு. வினை முற்றிய தலைவன் வீடு திரும்பாது சோலையிலோ, சாலை ஓரத்திலோ தங்குவானேன்? அவர் தமது அன்புக்கு இருப்பிடமாக மனைபுக அழைப்பு வேண்டுமா? அதுவா தமிழ்ப் பண்பு என்று என் மனம் என்னைக் கேட்கிறது அது மட்டுமல்லவே, மகனே வா! மாசிலாமணியே வா, வா! தலைமகனே வா, வா! என்று வருக அந்தாதியைப் பலர் பாடப் பாட எனக்குப் பயந்தான் மேலிடுகிறது.

“ஊரைக் கலக்கி வைக்கும் ஊத்துக்காட்டு அம்மையே, நாட்டைக் கலக்கி வைக்கும் நல்ல பத்ரகாளியே, வேண்டி அழைக்கிறோமே வேலாத்து அம்மையே,'' என்று சிலம்பைச் சுற்றி உடுக்கை முழக்கி, உள்ளே சென்ற குடிவகை, ஆவி மயமாக வெளியே வருமளவு உரத்த குரலிலே அம்மனை வேண்டிக் கூவும் பூசாரிகளை நான் கண்டிக்கிறேன். அதன் பலனாக ஆவேசம் வரும். வந்ததும் ஊத்துக் காட்டாளோ, சோத்துக் குடையாளோ, பூசாரியையும், பக்தர்களையும் பார்த்து, “ஆடுவெட்டிக் கோழி வெட்டிப் பூசை ஏண்டா போடலே? ஆடிமாத நோன்புக்கு ஆறு இலை போடலே, வேண்டிக் கொண்டபடி விருந்து படைக்கவேயில்லை!'' என்று கோபத்தைக் கக்கக் கேட்டிருக்கிறேன். அது போன்ற பூசை போடும் முறை, அரசியலிலே, மகா ஆபத்தாயிற்றே என்றன்றோ நான் அஞ்சுகிறேன்.

மேலும், கட்சிப்பணி புரியத் தலைமைப் பதவி தேவையா என்பது ஆழ்ந்து பதில் கூறவேண்டிய கேள்வி என்பதை அறிஞர் சண்முகம் அறிவார் பெரியார் கட்சித் தலைவராக இருக்கையிலேயே, அவர்பக்கம் நின்று சர்

சண்முகம் பணியாற்றவும், தமிழகம் அதைக் ‘காணவும் ஒருகாலம் பிறக்கக்கூடாதா! ‘இதோ எனது குடும்ப முதியோர்’ என்று பெரியாரை சர் சண்முகம் சுட்டிக் காட்டவும், “நான் வயதேறியவன், இதோ என் இளமையின் உருவம்’’ என்று பெரியார், சர் சண்முகத்தைச் சுட்டிக் காட்டவும் ஆலுக்கு விழுதுவிட்டது என்று ஆரியர் இதுகண்டு அஞ்சவுமான நிலைமை ஏற்படக் கூடாதா? பெரியாரின் தவறுகள்-பெரியாரின் குறைபாடுகள்-அவர் செய்யும் பிடிவாதம்-அவருடைய ஆற்றல் குறைவு-என்ற இன்னோரன்ன கூறி, பெரியாரைக் கண்டித்துவிட்டு, அவராலேயே கட்சி நசிந்துவிட்டது என்று பொய்யுரைத்து விட்டு, ஆகவே சர் சண்முகம் வர வேண்டும், என்று அழைக்கும் தோழர்கள், உண்மையிலே சர் சண்முகம், தலைவராக வேண்டுமென்று விரும்பி இதைச் செய்கிறார்களா என்பதே என் சந்தேகம்.

நாதியற்று நடுத்தெருவிலே கிடத்தப்பட்ட அகதியைப் பெரியார், இன்று கூறை வீட்டிலே குடியிருக்கச் செய்திருக்கிறார்; இனி மாடி வீடு கட்ட, சர் சண்முகம் வரட்டும், வர வேண்டும், வருவது முறையுங்கூட. அதைக் கூறாது, ஏழடுக்கு மாளிகையைப் பெரியார் குட்டிச் சுவராக்கி விட்டதாகவும், மண் மேட்டிலே மாளிகை அமைக்கச் சர் சண்முகம் வரவேண்டுமென்றும் கூறுவது அழகா, நீதியா, மனச்சாட்சிக்குச் சரியா என்று கேட்கிறேன்.

உண்மையிலே, சர் சண்முகம் வேறுவேறு இடங்கட்கு “இரவல்’’ அளிக்கப்பட்டிருந்தபோது, அவருக்கும் எனக்கும், தமிழர் யாவருக்கும் சொந்தமான மனை, அரசியல் மார்க்கட்டிலே, காங்கிரஸ் மார்வாடியிடம் சிக்கி, ஏலம் கூறப்பட்டபோது, மனையை மீட்டவர் யார்? இதனை மற்றவர் கூறுவதைவிட, சர் சண்முகம் கூற வேண்டும். சண்முக மாலை போடப் பெரியாரை வசை பாட வேண்டுமா! சண்முக வரவு பெரியாரின் துறவாக

முடியவேண்டுமா! இருவரும் இருக்குமளவு, கட்சியிலே இடமில்லையா! தேரை விரைவாகச் செலுத்திச், சர் சண்முகம் தமது மனைபுக வேண்டுகிறேன். ஆயிரக் கணக்கிலே தொண்டர்கள் அவரை ஆரவாரத்தோடு வரவேற்பர்!

சிலம்பொலியும் பூசையும் வேண்டாது, நேரே நொந்து கிடக்கும் முதியவர் அருகே நின்று, “பெரியாரே! அஞ்சற்க! வினைமுற்றி நான் வீடு திரும்பிவிட்டேன். இனி உமது பணி குறைய, நான் உதவி புரிவேன். என் ஆற்றல் இனி நமது மனைக்குப் பயன்படும்'' என்று கூறவேண்டும். அண்ணாமலை பல்கலைக் கழகத்தாருக்கு அவர் அளித்த அறவுரையின், அடுத்த அதிகாரம், இதுவாக இருக்கவேண்டு மென்பது என் அவா! அது ஈடேறுமா?

சர் சண்முகம் கட்சித் தலைவராக வேண்டும், என்ற பிரச்சினையைக் கிளப்பும் வேலையுடன் வேலையாகப், பெரியாரைக் கண்டித்தும் சிலர் இருப்பது, உண்மை யிலேயே எனக்குப் பிடிக்கவில்லை. சர் சண்முகத்துக்கும் அது பிடிக்காது என்றே நான் கருதுகிறேன். பெரியாரின் பெருந்தொண்டு, வரப்பும் வாய்க்காலும் அமைந்த கட்சிக்கு மட்டுமல்ல, தமிழகத்துக்கே பெரிதும் பயன்பட்ட தென்பதை மறுத்துப் பேசுவோர், நாளை சர் சண்முகத்தைச் சாடாமலா இருப்பர்! தமிழரின் தன்மானத்துக்கே வித்தூன்றிய தலைவரின் வயோதிகப் பருவம், வாகை சூட்டி வாழ்த்தும் ‘பக்தர்கள்’ நிரம்பியதாக இருப்பது முறை! அஃது இல்லையே, என்ற குறையோடு மட்டுமன்றி, அவருக்கு வசைமாலை தொடுத்துச் சூட்டிடல் முறையாகுமா, என்று கேட்கிறேன்.

உலகிலே பலபல தீவிரவாதிகள் தோன்றியது பற்றிய வரலாறுகள் எனக்குத் தெரியும். நாத்திகம் பேசிய

நாவலரையும் நானறிவேன். நெருப்பாறு தாண்டும் வீரரும் எனக்குத் தெரியும். ஆனால், அவர்களுக்கும், பெரியாருக்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசத்தை உணர வேண்டுகிறேன். அவர்கள் படித்த பக்குவ மனம் படைத்த கூட்டத்திலே பேசினர். அவர்களுக்கு எழுதினர். பெரியாரின் பணி, தற்குறிகள் நிரம்பிய தமிழகத்திலே, கல் வீச்சு, மண் வீச்சுக்கிடையே என்பதை அறிய வேண்டும், அதிலும் சகலமும் உணர்ந்த சகலகலாவல்லவர்களும், வெறும் சாமி யாடிகளைக் கண்டித்துப் பேசவும், சக்தியற்றுக் கிடந்த காலை, பெரியாரின் பெருங்காற்றுத் தமிழகத்திலே வீசி, நச்சு மரங்களை வேரோடு கீழே பெயர்த் தெறிந்தது என்பதை உணரவேண்டும், உணர்ந்திடின், கட்சித் தலைமையை ஏற்கச் சர் சண்முகம் வரவேண்டும் என்று எழுதுவதுடன், பெரியாரையும் சேர்த்துக் கண்டிக்கும் செயலை எவரும் புரியார். சர் சண்முகம் கட்சியின் நடுநாயமாகத் திகழ்வதற்குப் பிறரின் தூண்டுதல் தேவையா?

அதிலும் தூற்றல் முதலடியாகவும் தூண்டுதல் கடையடியாகவும் கொண்ட கவிதை, காதுக்கும் கருத்துக்கும் கேடுண்டாக்கும். கட்சியிலே கலகலப்பையும் அதன் மீட்சிப் பாதைக்கு வழி அடைப்பையும் உண்டாக்கும் என்பது என் அபிப்பிராயம். அதனை நான் வெளியிட்டதற்குக் காரணம், பெரியாருக்கு வக்காலத்துப் பெறவேண்டுமென்பது அல்ல, அவர் எவ்வளவோ எக்ஸ்-பார்ட்டித் தீர்ப்புகளைக் கண்டு கடகடவெனச் சிரித்து விட்டு, மடமடவென நடப்பவர். சர் சண்முகம் போன்றோரின் பணி, கட்சிக்கும், கட்சியின் மூலம் தமிழருக்கும் பயன்பட வேண்டுமே என்ற கவலையி னாலேயே, இதனை எழுதினேன்.

இன்று முதல் வேண்டுமானால் சர் சண்முகம் கட்சிப் பணி புரியத் தொடங்கட்டும், ஆயிரக்கணக்கிலே

வாலிபர்கள் அவருடைய அணி வகுப்பிலே நிற்பர், அதைக் காணலாம். கட்சியின் பொருட்டுக் கொள்கைக்காகத், திராவிடத் தனி அரசு அமைக்கத் தியாகமும் வீரமும் உடனிற்கச் சர் சண்முகம், போர்க்கோலம் பூண்டால், எத்தனையோ வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையினைத் திரணமாகக் கருதித், தீயிலே குதிக்கவுந் தயாராவர். ஓராண்டு கட்சித் தொடர்பு, ஈராண்டு கட்சி நிழல், மூன்றாண்டு கட்சி முறுவல் பெற்றோரும், இன்னமும் எனக்கொரு பதவி யில்லையா பட்டம் கிட்டவில்லையா, என்று கேட்டிடுவது என் போன்றவர் உள்ளத்தை என்ன பாடுபடுத்துகிறது, என்பதை விவரிக்கத் தேவையில்லை. இத்தகையோர் மத்தியிலே இருந்துழலும் ஒரு சில உண்மைத் தொண்டர்கள், உள்ளம் ஒடிந்து போவதும், விழலுக்கு நீர் வார்த்துக் கெடுவானேன் என்று எண்ணுவதும் சகஜந்தானே!

இந்நிலையை நீடிக்க விடுவது, திராவிடத்தைக் கெடுப்பதாகும் என்று எச்சரிக்கிறேன், விசனத்தோடு, கட்சித் தலைவர் மாற வேண்டுமென்பதற் க்காகப் பெரியாரைக் கண்டித்து எழுதுவது முறையாகாது என்பதையும், கட்சிக்குப் பணிபுரிய, தலைமைப் பதவி இன்றியமையாத தல்லவென்பதையும், தியாக உணர்ச்சி யுடன் தொண்டாற்றும் திறன் உள்ள தலைவர் வேண்டு மென்பதையும், இன்று நமக்கு வேண்டிய தலைவர் அரசாள அல்ல, அரசு அமைக்க, என்பதையும் எடுத்தெழுதினேன். இவ்வளவு, **வர்ணாசிரமம் ஒழிக!** என்ற பரணியைப் பல்கலைக் கழகத்திலே, அன்று சர் சண்முகம் பாடினதன் விளைவே, எனக்கு எவ்வண்ணம் இப்பரணி எழுச்சியை ஊட்டிற்றோ, அதேபோல, 'இந்து, மித்திரன்' முதலிய ஏடுகட்கு எரிச்சலை யூட்டிற்று.

பாசிபடர்ந்த மனத்தினிடம் நான் பரிசுத்தத்தை எதிர்பார்க்கவில்லை. எனவே, அப்பத்திரிகையின் போக்கு எனக்கு வியப்பூட்டவில்லை. அவை கக்கிய கண்டனம், காசநோயாளியின் இருமல்போல, அவற்றின் நோய்க் குள்ள குறிகளேயன்றி வேறல்ல; எனவே பரிதாபமின்றிச் சீற்றமெழவில்லை, அவற்றிடம். ஆனால், அவற்றிலே ஒன்றான 'மித்திரன்' கண்டனத்தினூடே கோத்திருந்த ஒரு கருத்து, என்னைச் சற்றுச் சிந்திக்கச் செய்தது, தோழர்களே! சற்றுச் சந்தேகத்தையும் தந்தது.

சர் சண்முகம், வகுப்புத் துவேஷம் வளர்க்கிறார், என்றுரைத்தது 'மித்திரன்' இது பழைய பஞ்சாங்கத்திலே ஒரு பகுதி! அதுகண்டு நான் ஆச்சரியப்படவுமில்லை, ஆயாசப் படவுமில்லை, 'நாசமாய்ப் போனவன், மணி பன்னிரண் டாகியும் தூங்கக் காணோமே'' என்று கைநொடிப்புடன் கூறுவாள் கள்ளி. காமவேதனையாலும், அதனைத் தீர்த்திடும் கள்ளப் புருடனாலும் பீடிக்கப்பட்ட கள்ளிக்குக் கணவன் விழித்திருப்பதுகூடக் குற்றமெனத் தோன்றலாம். விபசாரியின் இந்த விசாரத்தைக் கண்டு, "அபசாரம், அபசாரம்'' என்று கூறும்பேர்வழி, ஆண்மை யற்றவனாகத் தானே இருக்க முடியும்! வில்லுக்கு ஒரு அம்பு, பல்லுக்கு ஒரு எலும்பு, அதுபோல் பாதிராத்திரி வேளையில் பக்கத்துக்கோர் ஆள், தேடும் பாதகியின் மொழியைத் துச்சமெனத் தள்ளிடுதல்போல. நான் ஆரிய ஏடுகளின், கண்டன மொழிகளைத் துச்சமாகவே கருதுகிறேன்.

ஆனால், 'மித்திரன்' ஒன்று எழுதிற்று. என் உள்ளம் கொஞ்சம் வேதனையடைந்தது, சர் சண்முகம் வர்ணாசிரமக் கோட்டையைத் தகர்க்க வேண்டுமென்று கூறுகிறார். அவர் நமது பழைய நூல்களின் அருமை பெருமைகளை இப்போதுதான் கொஞ்சம் தெரிந்து கொண்டதாகக் கூறுகிறார். இனி, அவை முழுதும் உய்த்து

உணர்ந்துவிட்டால், வர்ணாசிரமக் கோட்டை யைத் தகர்க்கும் எண்ணத்தையே அவர் கை விட்டுவிடுவார்!- என்று 'மித்திரன்' எழுதிற்று.

சர் சண்முகம், கலையின் உயர்வுபற்றி, தமிழ்க் காப்பியங்களின் அருமை பெருமை பற்றிப் பேசினா ரல்லவா! அதை 'மித்திரன்' தனக்குச் சாதகமாக உபயோகிக் கிறது. வர்ணாசிரமத்தை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் ஒரு நோய், தமிழ்க்கலையுணர்வு, அதனை நீக்கிடும் ஒரு மருந்து; மருந்து போன்ற அந்தக் கலையுணர் வினைச் சர் சண்முகம் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக உட்கொண்டு வருகிறார், இன்னும் மருந்தினைச் சற்று அதிகமாகப் பருகினால், நோயே போய்விடும், என்ற தொனியிலே 'மித்திரன்' தனது தம்பூராவை மீட்டுகிறது. இது வெறும் நாரதகானமாக இருக்கக்கூடும். வர்ணாசிரமம் நோயா, வர்ணாசிரமத்தை ஒழித்தாக வேண்டும் என்ற விருப்பம் நோயா. எது நோய், என்பது வேறு விஷயம். கலை, மருந்தா விருந்தா, என்பது வேறு விஷயம். அறிஞர் யாவரும் நாட்டை நலியச் செய்த நோய், வர்ணாசிரமம் என்றே கூறினர். வர்ணாசிரமத்தை 'மித்திரன்' நாட்டை வளமாக்கும் வனிதாசிரமமாகக் கருதலாம். மித்ரபலம் பெருக அது ஏதுவாகக் கூடும்; அதுவும் வேறு விஷயமே.

வர்ணாசிரமத்தை ஒழிக்கும் எண்ணம், பழங் காப்பியப் படிப்பினால் பாழ்பட்டுவிடும், என்ற கருத்தை 'மித்திரன்' வெளியிட்டிருக்கிறது உவமைத் தகராறுகளை ஒதுக்கிவிட்டால் இது விளங்குகிறது. இதிலே உள்ள சூட்சமம், என்னைச் யோசிக்கச் செய்கிறது. உண்மை யிலேயே, கலை உணர்வு பெருகப் பெருக, தமிழர் என்ற இன உணர்வு அறுளகுமோ, அண்ணல் சண்முகத்துக்கும் இது நேருமோ, என்றே நான் அஞ்சுகிறேன். சர் சண்முகம் இது போது, தமிழ்க் காப்பியமெனும் பூங்காவிலே உலாவுகிறார்

என்பதும், அங்குப் பறித்தெடுத்துத் தொடுத்த அழகிய மாலையினை வசந்த வட்டிலிலே வைத்துத் தமிழருக்குத் தருகிறார் என்பதும் கலா ரசிகர்களுடன் கூடிக் குலவி காவியக்கனி ரசமருந்திக் களிக்கிறார் என்பதும் பிறர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

'மித்திர'னும் அதனை அறிந்து "சரி சரி!! அந்த ரசம் இன்னும் கொஞ்சம் உட்கொண்டால், வர்ணாசிரம ஒழிப்பு என்ற பேச்சு ஒழியும்'' என்று எழுதுகிறது. இது என்னைச் சிந்தனை யிலாழ்த்திற்று. இனி அச் சிந்தனை பற்றிக் கூறுகிறேன். இதுபோது நீவிர் சற்றே உமது சிந்தனையைச் செலவிட வேண்டுகிறேன். 'மித்திரன்' கூறின வாசகத்தின் மருமம் என்ன?

அழகான அந்திவானம்! ஆற்றோரத்திலே நாரை கவலையுடன், கண்கள் முழுதும் திறந்துமில்லை, முழுதும் மூடியுமில்லை, கபடம் நிறைந்த விழி, நாரைக்கு. நின்ற கோலத்திலே, தவங்கிடக்கிறது நாரை; சாதாரண ரிஷிகள் போலத் தனது முக்தி கோரியல்ல! ஆற்றிலே துள்ளிக் குதித்து அல்லற்படும் மீன்களுக்கு முக்தி தர! எந்த ஆற்றோரத்திலும், பிற நீர் நிலைகளிலும், நாரை நின்றிடும். இக்காட்சியை எவரும் காணலாம். கல்லெடுத்து வீசிடின், நாரை சென்றுவிடும். ஆனால் கவிதையை வீசி, அந்தக் காட்சி, என்றும் கருத்துள்ளோரின் மனதை விட்டு அகலாதவண்ணம் ஒருவர் நாரைக்கு "அமரத்துவம்'' அளித்துள்ளார்.

நாரை மீனைக் கொத்தித் தின்பதற்காக அடக்கமே உருவானதுபோல, அங்குக் காத்திருக்கிறது, அதன் தீய எண்ணம் துளியும் வெளியே தெரியாதபடி நாரை நடிக்கிற நேர்த்தியைக் கவிஞர் காணுகிறார். மீன் தேடிடும் நாரை, ஆற்று நீரிலே இறங்கி அலையக் காணோம். வட்டமிடவு

மில்லை, பதைக்கவில்லை; வேறு ஏதோ காரியத்துக்காக, அல்லது வெறும் பொழுது போக்குக்காக அந்த ஆற்றோரத்தை அடைந்தது போலப் பாவனை புரிகிறது.

அந்த நாரையின் நினைப்பு முழுதும், மீனின் மீது! நடிப்போ, சர்வபரித் தியாகத்துக்கும் தயாராக இருப்பது போல! இதைக் கண்ட கவிஞர் பறவை இனங்களிலே இவ்வளவு கபடம் கற்றதாக நாரை இருப்பது போல மக்களிலே யார் உளர்; என்று எண்ணாமலிருப் பாரா? கற்றோர்க்கும் மற்றையோர்க்கும், இதுதானே வித்தியாசம்! கற்றோர், காட்சியுடன் கருத்தினைப் பிணைப்பர். மற்றையோர் காண்பர், களிப்பர், மறப்பர்!

கவிக்கு ஆற்றோரத்திலே நாரை நிற்கும் காட்சி, வஞ்சகத்தை மறைக்கும் நடிப்பு, மக்களிலே ஒரு சாராரின் மனப்பாங்கையும் நடவடிக்கையையும் நினைவூட்டுகிறது உவமை கண்டு உளம் களிக்கிறார். இயல்பினால் மட்டுமே உவமையன்று! இடமுங்கூட, ஒன்றாகவே இருக்கும் உவமை அவருக்குத் தோன்றுகிறது, அதே ஆற்றங்கரைகளிலே, செவ்வானம் தோன்றும் வேளையிலே, நாரை போலவே, நினைப்பை நடிப்பால் மறைக்கும் ஒரு கூட்டத்தாரின் குணம் அவருக்கு நினைவிற்கு வருகிறது; ஒரு நேர்த்தியான கவிதையும் பிறக்கிறது, கவிஞரின் உள்ளத்திலிருந்து.

''பொன்மலைசுடர் சேரப்
புலம்பிய விடனோக்கித்
தன்மலைந்துலகேத்தத்
தகைமதியேர் தரச்
செக்கர்கொள் பொழுதினா
னொலி நீவியிளநாரை
முக்கோல்கொள் அந்தணர்
முதுமொழி நினைவார்போ
லெக்கர்மேலிரை கொள்ளு......''

நாரையைக் கண்டதும், பார்ப்பனரின் நினைவு, கவிக்கு! ஆற்றோரத்திலே, அந்திவானத்திலே, நிற்கும் நாரை, மந்திர உச்சாடனம் செய்வது போன்ற பாவனையுடன், நீர் நிலைகளருகே நித்த நித்தம் அமர்ந்துள்ள, பார்ப்பனரின் உருவம் போன்றிருந்ததாம் கவிக்கு! எந்தக் காலத்துக் கவி? கலித்தொகைக் காலம்!! அந்தக் காலத்திலேயே, ஆரிய இனம், காரியம் பலிக்கக் கபட வேடமிட்டுக் கிடந்தது என்பதற்குச் சான்றுகள் அனேகமுண்டு. இன்றும் அந்த இயல்பு கொஞ்சமும் மாறாது தானிருக்கிறது, நாரைபோல நின்றிருக்கும் நடிப்புத் திறனை அந்த இனத்தார் செம்மையாகச் செய்வர்.

கலை எனும் அருவியோரத்திலே, ஆரிய நாரைகள் அமர்ந்துள்ளன; கலையருவிக் காட்சியிலே, தம்மை மறந்திருப்பதாகப் பாவனை! முதுமொழி நினைவார் போல, கலையின்பத்தையே நினைத்தவண்ணம், ஆரிய நாரைகள் அமர்ந்துள்ளன, இரையும் வேண்டாம், இந்த இன்பமே போதும், என்று கூறுவர்! இதிலுள்ள உண்மையின் உயர்வும், நேர்த்தியும், வேறு எதிலே காணமுடியும் என்றுரைப்பர். வேறொன்று வேண்டாப் பராபரங்களாகக், கலை வழிபாடன்றிப் பிறிதோர் பெறத் தக்க பேரில்லை என்ற பெருங் குணவான்களாக, மன இருள், கலை ஒளிபட்ட மாத்திரத்திலே, அடியோடு தொலைந்ததென்று கூறும் ஞானவான்களாக, யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று உபதேசிக்கும் உத்தமர்களாக, அறிவு பெரிது, அதனினும் பெரிது அறிவின் பயனாக விளையும் ஆனந்தம், அதனினும் பெரிது அந்த ஆனந்தத்தை அனைவரும் பெற்றிடச் செய்தல் என்று கூறிடும் ஆசிரியர்களாக் காட்சியளிப்பர்.

அவர் தம் நெஞ்சமோ, ஓர் எரிமலை! விழியோ, எவர் உழைப்பை எங்ஙனம் ஏய்த்துப் பெறுவது என்ற

தந்திரத்தைக் கக்கும் குழிகள்! அருவியோரத்து நாரையின் நினைப்புத் துள்ளிக் குதித்திடும் மீனினத்தின்மீது! ஆரிய நாரைகட்கோ, கலையருவியில் குளித்து இன்புற வேண்டிவரும் தமிழரைக் கொத்தித் தின்ப தன்றி வேறில்லை. கலையருவியே, இக்காரணத்திற்குத் துணையாக நிற்கிறது. கடிவாளத்திற்கு வாய்திறந்த பிறகு, குதிரையின் கொட்டம் அடக்கப்படுவது ஆச்சரியமாகுமா? மூக்கணாங் கயிற்றுக்குச் சம்மதித்த பிறகு, மூலைவாரினால், சாட்டை தானே பேசும்!

அது போலத்தான். கலையருவியிலே நீந்தி மகிழத் தொடங்கிவிட்டால், ஆரிய நாரைகளின் கூரிய மூக்கின் வேலையும் தொடங்கும், கலையருவி அங்ஙனமுளது இங்கு. எனவேதான், "சரி, சரி, செட்டியாரே! கலை உணர்வு பெற்று வருகிறீர்களல்லவா! அந்த உணர்வு இன்னும் கொஞ்சம் அதிகரிக்கட்டும், பிறகு ஆரிய-திராவிடப் போராட்டத்திலே உமக்கிருக்கும் ஆர்வம் பஞ்சாய் பறக்கிறது! பாரீர்'' என்று 'மித்திரன்' கூறுகிறது.

"ஒரே ஒரு செங்கல் பெயர்த்துவிட்டால் போதும்'' என்று கருக்கலிலே நின்று கன்னமிடும் கள்ளன் கூறுவான்.

"கண் சிவந்துவிட்டது. கைகால் துடிக்கிறது. பேச்சும் படபடக்கிறது, இன்னும் ஒரே ஒரு கிளாஸ் குடித்துவிட்டால் போதும், ஆசாமி கீழேசாய்வான் பிறகு அகப்பட்டதைச் சுருட்டலாம்'' என்று மதுவை ஊற்றி மடியைத் தடவும் தடியர் கூறுவர்.

"இப்போதுதான் என்னிடம் அவருக்குப் பிரேமை அதிகரித்திருக்கிறது, இது இன்னும் கொஞ்சம் வளர்ந்து விட்டால் போதும் பிறகு நான் சொன்னபடி ஆடுவார்; சொத்து முழுவதையும் எழுதிக் கொடுத்தாக வேண்டும். என்று கட்டளையிட்டாலும் தட்டாமல் செய்வார்'' என்று

கண்வெட்டால் கருத்தை வெட்டிய காமக்கள்ளி, தன்னிடம் சிக்கிய சீமானைக் குறித்துக் கூறுவாள்.

"முகத்திலே இன்னும் ஒரே ஒரு குத்து விழுந்தால் போதும், ஆசாமி கீழே விழுவான் தங்கத்தோடாவும் வெற்றிமாலையும் நமக்குத்தான்'' என்று கூறுவான், குத்துச்சண்டைப் பந்தயத்திலே ஈடுபட்டவன்.

"இன்னும் சில நாள்களில் ஆசாமி சிவலோகப் பிராப்தியடைவான். பிறகு நானே சீமான், நமதே வாழ்வு'' என்று லோபியின் வாரிசு கூறுகிறான்.

இந்த "ரகங்களிலே, எதை நீங்கள் 'மித்திரன்' வாசகத்திற்கு உவமையாகக் கொள்வீர்களோ, எனக்குத் தெரியாது தோழர்களே! எனக்கென்னவோ, இவ்வளவும் இன்னும் பலவும் தோன்றின. 'மித்திரன்' சர் சண்முகம், பண்டைக் காப்பியங்களை மேலும் நன்றாகப் படிப்பாரானால் வர்ணாசிரமக் கோட்டையைத் தகர்க்க வேண்டுமென்ற நினைப்பையே விட்டுவிடுவார், என்று எழுதி இருந்ததைப் படித்ததும், சூட்சுமமின்றி 'சுதேச மித்திரன்' எழுதாதே வீணுக்கு வார்த்தையை வீசிடாதே, இந்த வாசகத்திற்கு விசேஷார்த்தமின்றி, 'மித்திர'னில் இடம் பெறாதே, என்று எண்ணியே ஏங்கினேன். சென்ற கிழமையே உம்மிடம் இயம்பினேன். இக்கிழமை, அது குறித்துச் சிந்தித்தேன்; செக்கர் கொள் வானமும், சிந்து பாடும் சிற்றாரும், நின்றிடும் நாரையும், நினைவிலே நின்றன!

"வர்ணாசிரமம்'' என்ற தலைப்பிலே, கலைப் படிப்பு ஆரியக் குழியிலே, தமிழரைத் தள்ளக்கூடியதாக இருக்கிறது என்று எழுதுகிறாயே, சர் சண்முகம் தமிழ்க் கலையிலே ஆர்வங்கொண்டிருப்பதால், நல்லது விளையுமேயன்றி நாசமா நேரிடும், விளக்கு, என்று அன்பரொருவர் கேட்கிறார், பழைய காப்பியங்களைப் படிக்கப் படிக்க,

ஆரிய-திராவிடப் போராட்ட உணர்ச்சி ஒழியும் என்பது ஆரியருக்கு நன்கு தெரிந்திருக்கிறது.

ஆகவேதான், தற்காலப் புத்தறிவுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசும்போதும் எழுதும்போதுங்கூடப், பழைய ஏடுகளுடன் அவற்றை இணைத்துக் காட்டுகின்றனர். இரு கருத்துகள் அவர்கட்கு, இரண்டும் இடையூறு உண்டாக்கு வனவே! ஒன்று இன்றைய உலகிலேப் புதிதாக ஓர் அறிவும் இல்லை, பழைமையிலேயே யாவும் உள, என்று பேசுவதன் மூலம், புத்துலக உணர்வு வராமல் தடுப்பது. மற்றொன்று. அத்தகைய பழைமை உணர்வின்படி நின்றபின், வர்ணாசிரமம் நிலைக்கும் என்பது. இவ்விரண்டும், நாட்டு மக்களை நலிய வைத்து, “முகத்துதித்தோரை'' முடிசூடா மன்னராக்கும் முறைக்கும் பயன்படுகின்றன. எனவேதான் நான் கலையருவியிலே கவலையுடன் ஆரிய நாரை அமர்ந்திருக்கிறது, அதைக் கவனத்தில் வையுங்கள் என்று கூறினேன்.

எந்தச் சந்தர்ப்பத்தையும் நழுவவிடாதே! எதையும் உனக்குச் சாதகமானதாக்கிக் கொள்ளத் தவறாதே! என்பவை, ஆரியரின் இலட்சியம். இரண்டாயிரம் ஆண்டுகளாகவே! இதன்படியேதான், கலையையும் அவர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் புகுத்தும் கருவியாக்கி னார்கள். உணவு கண்முன் ஊசலாடுகிறது என்ற உவகையுடன் துள்ளிக் குதிக்கும் மீனுக்குத் தூண்டிலே தூக்குமரமாகிறது! அதுபோலக் கலையழகு காண்போம் என்று எண்ணிப் பழைமைமுன் கூத்தாடும் தமிழர், ஆரிய ஆதிக்கத்திலே சிக்கிவிடுகின்றனர். ஒரு சிறு சம்பவம், புத்துலகப் பற்றுக்கொண்ட ஒரு திருவாளரின் திருமனையிலே நடைபெற்றது, கற்பனையல்ல; ஆனால் கண்ணியமான முறைக்காக வேண்டி, பேருக்கு முக மூடியிட்டிருக்கிறேன், உமது மன்னிப்பை எதிர்பார்த்து.

"வாருங்கோ! நேற்று மாலை நெடுநேரம் வரை காணோம், எங்கே போயிருந்தீர்கள்?'' என்று கேட்டார், புத்துலகப் பற்றுடையார். பழைமையாளர் சொன்னார், "பரதநாட்டியம் காணச் சென்றேன். பரமானந்தம் கொண்டேன். பாத்திரம் முதல்தரமானது. அபிநயம் அபாரம். கீதம், இலலிதமாக இருந்தது'' என்று. புத்துலகப் பிரியருக்கு நடனங் காண ஆவல் பிறந்தது, கலைக்காகத் தான்! கண்டார். "கண்டவுடன் என்றன் உள்ளம் கொள்ளை கொண்ட கள்வா'' என்ற சகானாபாட்டுக்கு அபிநயம் அழகுற நடந்தது. அம்மையும் கலைக்காகத்தான் அதனை நடத்தினார். இருவரும் தங்களை அறியாமல் கட்டிலறை நோக்கி நடந்தனர்; அது வேறு விஷயம்.

பிறகு, நர்த்தனத் தத்துவந்தான் நடராஜர், என்று புத்துலகப் பிரியருக்குப் பழைமையாளர் புகன்றார். விக்கிரகம் வாங்கப்பட்டது, அந்தத் தூக்கி நின்றாடும் காட்சியிலே, கூத்தின் விளக்கங் காணத்தான், வேறு எதற்குமல்ல; காலையிலே காண்பார், கலையழகை எண்ணுவார், கூத்தனின் சிலை மூலம், பிறகு பழைமை யாளர், "விக்கிரகத்தை வீணாகப் பாழாக்குகிறீர், நீராட்டாது விட்டீரேல், அது பாசி ஏறிப் பாழ்படுமே'' என்றுரைத்தார். ஆமென்றார் புத்துலகர். அபிஷேகம் என்ற முறையிலே அல்ல, விக்ரகத்தைத் தூய்மையாக வைத்திருப்பது என்ற முறைக்காக நீராட்டி வரலானார்.

"பளபளப்பான சிலைக்கு ஒரு பட்டுத் துண்டும் கட்டிப் பாருங்கள், அதன் அழகே அலாதிதான்'' என்றார் திருவாளர் பழைமை. மிஸ்டர் புதுமை, இது ஒரு பிரமாதமா, கொண்டு வா, கொள்ளே காலம் பட்டு வேஷ்டி'' என்றார். "வீட்டிலே பறிப்பாருமின்றி மலரும் மலர், உமது அறையிலே மணமூட்டட்டும், அதைப்பறித்து

மாலை தொடுத்துக் கூத்தன் சிலையிலே போட்டு விடுங்கள்'' என்றார், பழைமை, அதுவும் நடந்தது. "உங்களுக்கிருக்கும் வேலையிலே, காலையிலே இந்தக் காரியங்களையெல்லாம் எப்படிச் செய்து கொண்டிருக்க முடியும், யாராவது ஒரு ஐயனை வேலைக்கு வைத்து விடுங்கள்'' என்று பழைமை யோசனை கூறினார். ஐயரும் வந்து சேர்ந்தார். அவர் தமது வேலையைச் சரியாகச் செய்கிறாரா என்று பார்க்கக் காலையிலே மிஸ்டர் புதுமை செல்லலானார். ஐயர் விபூதி மடலை நீட்டினார். இரண்டொரு வாரங்களிலே "குனித்த புருவம்'' எனும் தோத்திரம் பாடவும், கூத்தனை எட்ட நின்று கும்பிடவும், குடும்பக் கோயில் குருக்கள் தரும் குங்கும விபூதியைப் பயபக்தியுடன் வாங்கவும், மிஸ்டர் புதுமை பழகிவிட்டார். திருவாளர் பழைமை "தீர்த்துக்கட்டி விட்டோம் ஒரு தீப்பொறியை'' என்று தமது குறிப்புப் புத்தகத்திலே பொறித்துக்கொண்டார்.

இதுபோலக் கலையிலே தொடங்கி ஆரிய வலையிலே வீழும்வரை பலர் சென்று விடுவதைக் கண்டதாலேயே நான், "கலையின் பேரால் ஆரியர் நடத்தும் சூது இது, எச்சரிக்கை'' என்றுரைக்கிறேன்.

பழைய காப்பியங்களைப் படித்துக் கலையுணர்வு பெறுவது, இன எழுச்சியைச் சாகடிக்கும் நச்சு, என்ற 'மித்திரன்' வாசகம், ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதென்பது என் கருத்து, ஒருவரை மற்றொருவர் அடிமை கொள்ள, வசியப்படுத்த, வீழ்த்த பலவகை உண்டு. முறை பல உண்டு. வீரர் வேல்கொண்டு போரிடுவர், தமது ஆற்றலையே, ஆதிக்க அளவுகோலாகக் கொண்டு வீரமற்று வஞ்சக உள்ளம் கொண்டோர், மறைந்திருந்து தாக்குவர், மாற்றானை மாய்த்திட எம்முறையும் ஏற்றதே என்று கூறுவர். மரங்களுக்குப் பின்புறமிருந்து வாலியைக் கொன்ற

ஆரிய இராமன் போல! நண்பனாக நடித்து நயவஞ்சகத்தால் காரியத்தைச் சாதிக்கும் கயவரும் உண்டு!

எதிர்ப்போனின், உடன் பிறந்தாரையோ, ஏவலரையோ, விலைக்குப் பெற்று, விபிஷ்ணாஸ்திரத்தால் வீரனை வீழ்த்தும் வகையுமுண்டு; மாயமொழி பேசியும் மாற்றானை மாய்ப்பதுண்டு! எதிரியின் ஏமாளித்தனத்தைத் தெரிந்து அவனைச் சாய்ப் பவருமுண்டு. உலகம் பலவிதம். கரியைப் பிடித்திழுத்துக் கரகரவெனச் சுழற்றி அடிக்கும் வீரனானாலும், காமவல்லி களின் கடைக்கண் பார்வையாலோ, புன்சிரிப்பெனும் பாணத்தாலோ, அதரமெனும் அஸ்திரத்தாலோ, அடியற்ற நெடும் பனையாவதுமுண்டு.

தேவர்கள் யாரையும் தீர்த்துக் கட்டும் மாவலி பெற்ற அசுரர்கட்கு, அமிர்தம் தந்திடின், அமரர் உலகு அசுர உலகாகுமென்றெண்ணிய அரி, அழகி உருக்கொண்டு ஆடிப்பாடி அசுரரை ஏய்த்த சூது, ஆண்டவன் லீலையாகப் போற்றப்படும். இந்த நாட்டிலே, வேறு பலர், மோகினி ரூபம் வீரரை வீழ்த்தும் வேல் என்று கொண்டதிலே ஆச்சரியப்படுவதற்கில்லை. சர்வ வல்லமையுள்ளவரே, சாகசத்தைச் சக்கரமாகக் கொண்டே அசுரரை சம்ஹரித்தார் என்றால், சாதாரண மக்கள் அம்முறையைக் கையாளாமல் இருப்பரோ! இங்ஙனம், ஒருவரை ஒருவர் வீழ்த்தப் பல்வேறு வகையும், பல்வேறு கருவியும் இருத்தல் போலவே, ஒரு இனத்தை மற்றோர் இனம் அடக்கக் கையாளும் முறையும் பல வகைப்படும். தீப்பந்தமும் திடீர்த் தாக்குதலும் ஒரு முறையாக அமைந்திருக்கிறது! படையில் கலகமூட்டுவது பாசறை கெடுத்தலும், சில சமயம் கையாளப்பட்டன. அடுத்துக் கெடுப்பதும், அணைத்து அழைப்பதும் சிலசமயம் நடந்ததுண்டு.

உலகிலே இதுபோல், இனப்போரின் போது, ஒவ்வொரு விதமான முறையைக் கையாண்டிருக்கிறார்கள். ஆரிய இனம் எப்படை கொண்டும் திராவிடரை வீழ்த்தவில்லை; அப்புறப் படையினருக்குப் போரிடும் ஆற்றலே இருந்ததில்லை. திராவிட இனம், ஆரிய தாசராக மாறிட ஆரியர் கையாண்ட முறை கலையருவியிலே திராவிடரைத் தள்ளியதுதான்! எமது கலையழகைக் காணீர், என்று கூறித் திராவிட இனத்தை மயக்கி, வீரரைக் கோழையாக்கி வீழ்த்தினர். அன்று வீழ்த்தியது மட்டுமல்ல, இன்றும் இனி என்றுங்கூட அந்தக் கலை எனும் அங்குசத்தால் திராவிடமெனும் மதகரியை அடக்கலாம், என்ற மனப்பான்மை யுடனேயே ஆரிய இனம் இருக்கிறது. அதிலே ஓரளவு உண்மையும் இருக்கிறது.

மாயா உலகைத் துறக்க எண்ணினார் ஓர் மலையாண்டி. காவி அணிந்தார், காடேகினார். கடும்பசி வந்துற்றபோதன்றிக் கண் திறவார். கடுந்தவம் செய்து வந்தார், ஒரு மாலை, முல்லை, மலர்ந்திருக்கக் கண்டார், நறுமணத்தைப் பெற்றார். நன்று நன்றென நவின்றார். இரவு இறைவனின் திருவருளை வேண்டினார், உறங்கினார். காலையிலே, முல்லை கண்ட பக்கம் சென்றார், மலரைக் காணோம்! மகேஸ்வரனைச் சில விநாடி மறந்தார், முல்லையைப் பறித்தது யாரோ, என்ற சிந்தனையில் ஈடுபட்டார். அருகே, காலடிக் குறி கண்டார், சற்றுக் கோபங்கொண்டார். மாலை வேளையில் கைப்பிடியாகக் கள்ளனைப் பிடிப்போமென்று கருத்துட்கொண்டார்; காயமே இது பொய்யடா என்றார்; கண் மூடினார் கனிமரத் தடியிலே. மாலையில் சென்றார்.

முல்லைப் புதருக்கு. முழுமதியன்ன முகவதி, முல்லைச் சிரிப்புடன் நின்றிடக் கண்டார், முல்லையைப் பறித்தபடி! "பேசா மலரைப் பறிக்கும் பேசும் மலரே!" என்று

அழைத்தார். வணங்கினாள் வனிதை, வந்தவழி சென்றாள்; விழியை அப்பக்கமிருந்து வாங்கிட விரக்தி மார்க்க வித்தகருக்கு நெடுநேரமாயிற்று, மறுதினம் மாலை, மங்கை வருமுன்னம், மலரைப் பறித்தார். வந்ததும் வாஞ்சனை யுடன் அவளிடம் தந்தார். தருகையிலே, கரத்தோடு கரம் சேரக் கருத்தோடு கருத்து மோதிக் கொண்டது.

மறு தினம், காலை முதல் காடு முழுதும் சுற்றி வகை வகையான புஷ்பங்களைப் பறித்தார் துறவி; மாலை நேரத்திலே, முல்லைப் புதருக்கு ஓடோடி வந்தார், முல்லையைக் கொய்தார்; ஏன் இன்னும் அந்த இரஞ்சித சுந்தரி வரவில்லை என்று தன் நெஞ்சைக் கேட்டார். மங்கை வந்ததும், "இதோ மல்லிகை, இது முல்லை, செண்பகக் கொத்து, ரோஜா, இதோ செந்தாமரையும் உண்டு காண்" என்று மலர்க் குவியலைக் காட்டினார்.

"மகானே! இந்த மங்கையின் பொருட்டு இவ்வளவு சிரமமா?" என்று கேட்டாள் மங்கை, அன்று அந்த மது உண்டதால் புதிய உற்சாகம் பெற்ற நீறுபூசி, நீற்றையும் நிகண்டையும் நித்திய பூசையையும் நிஷ்டையையும் துறந்தார்; மலர் பறித்திடவும் மாலை தொடுத்திடவும், மங்கையைக் கண்டிடவும், மலர் தந்திடவுமே அவருக்கு, நேரமும் நினைப்பும் இருந்தது. இந்த 'சக்தி' பூசையின் பயனாக, அவர் சன்யாச ஆசிரமத்திலிருந்து கிரஹஸ்தா சிரமம் புகுந்து, மாயா உலக பந்தம் வேண்டேன் என்ற மனத்தைத் துறந்து மனையறம் படித்து, அந்த ஊரிலேயே முதல் தரமான புஷ்பம் விற்பவரானார், என்றோர் கதை உண்டு. கலை இங்குள்ள நிலையிலேயே, அதிலே இலயிப்பவர்கதியும் மலையாண்டி மனையாண்டியானது போலத்தான் முடிகிறது, என்று நான் எண்ணுகிறேன். கலா ரசிகராகத் தொடங்கும் வாழ்க்கை கனபாடியின்

தோழராக்கி, பக்தராக்கி, ஆரிய அடிமையாக்கிவிடுகிறது. அந்த விதத்திலே கலை அமைந்திருக்கிறது. சங்க நூற்களிலேயுங்கூடச் சந்து கண்ட இடங்களிலே வந்து நுழைந்து கொண்டது ஆரியம். கடைச் சங்கத்திற்குப் பிறகோ எனில், ஆரியக் கருத்தே உட்பொருளாகவும், கலையே கவசமாகவும் அமைந்த நூற்கள் பெருகிவிட்டன.

சங்க நூல்களிலே, யானை அலறக் கேட்டு அஞ்சிய தலைமகளை, அஞ்சற்க என்று கூறி ஆதரித்த தலைமகனைக் காண்கின்றோம்; பிறகோ, அண்ணனை ஆனையாக்கி யனுப்பி வள்ளியைப் பயமுறுத்தி மணம்புரியும் வேலன் கதை வீடு தோறும் புகுந்தது காண்கிறோம். சங்க நூற் சித்திரம் சிலருக்கே தெரியும்; புராணக் குப்பையோ, தெரியாதவர் மிகமிகச் சிலரே.

சங்க நூல்களிலே, மந்திக்குக் கனி பறித்தீயும் காதற்கடுவனைப் பற்றிய சித்திரம் காண்கிறோம். பிறகோ, சஞ்சீவி பர்வதத்தைப் பெயர்த்தெடுக்கும் சர்வ பண்டிதனாம் அனுமனைக் காண்கிறோம். உண்மை உவமையை உரைத்த உயர்நூலை அறிந்தோர் சொற்பம்; புராணப் புளுகைப் போற்றிடுவோரே, பெருந் தொகையினர்.

ஆண்மான் பெண்மானுக்குத் துணை நிற்கும் அழகிய காதலறத்தைக் காட்சியாக்கிய கவிதை படித்த தமிழனுக்கு, மாரீசனின் மாயமான் கதை கலையாக்கப்பட்டு விட்டது! முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை, எனும் நிலப்பண்பு தெரிந்து இன்புற்ற இயல்பு முன்பு! பிறகோ, நாலு வர்ணமெனும் நச்சுப் பொய்கையில் நெளியும் நிலைமை! கலையின் பேரால், ஆரியக் கற்பனைகள், தமிழரின் கருத்திலே தூவப்பட்டுவிட்டன, இதனை நன்கறிந்தே "சுதேசமித்திரன்" கலையுணர்வு பெறப்

பண்டைய காப்பியங்களைப் படித்திடட்டும், சர் சண்முகம். அதன் மூலமாகவே அவரை முறியடிக்க முடியும்'' என்று கருதுகிறது, முடியுடை வேந்தரையும் வீரரையும் வீழ்த்திய முறை அதுவன்றோ, சர் சண்முகம் மட்டும் என்ன, தப்பவா போகிறார், என்று 'மித்திரன்' கருதுகிறது; நறுமலர்க் கூடையிலே நச்சரவு இருந்திடின், மலர் தேடும் கையிலே விஷப் பல்லன்றோ தீண்டும்! பழைய காப்பியத்திலே பிரேமை அதிகரித்தால் திராவிடப் பண்பு பாழ்பட வழி இருக்கிறது என்பதறிந்தே, "சுதேசமித்திரன்'' அந்தச் சொல்லை வீசியிருக்கிறது.

உண்மையிலேயே, சர் சண்முகம், கலையின் மேம் பாட்டினைச் சுவைக்கக் காப்பியக் கடலிலே மூழ்கிடுவதை நான் தடுக்கவில்லை. ஆனால், அக்கடலிலே ஆரிய அலை மோதுகிறது. சனாதனமெனும் சுறாமீன்கள் உலவுகின்றன, வர்ணாசிரமம் எனும் வாயகன்ற திமிங்கிலமுளது, என்று எச்சரிக்கை செய்யாவிடின் எனக்கு அவர்பால் உள்ள அன்பினை மறந்தவனாவேன். கலையுலகிலே, அவர் உலவுவது, ஆரியபுரிக்கு அவரை அழைத்துச் செல்லா திருக்க வேண்டும். கலையார்வத்திலே ஈடுபட்டு, ஆரிய ராவது திராவிடராவது என்று கூறிடும் முத்துரங்க மாகவோ, இகலோகத்தைப் பற்றி இவ்வளவு கவலைப் பட்டுக் கிடப்பானேன், பரலோகத்தைப் பற்றியன்றோ சிந்தனை செய்ய வேண்டும் என்று கூறிடும் பாராயண பக்தராகவோ, மாறிடாதிருக்க வேண்டும்.

இலட்சியம் வளர்ந்த வரலாறு

27.8.1944-ஆம் நாளன்று
"திராவிடநாடு திராவிடருக்கே" என்ற கொள்கையினை
முழக்கிப் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை.

இலட்சியம் நமது மூல முழக்கம்

திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சியம், இப்போது நமது மூல முழக்கமாகிவிட்டது. மற்றப் பல பிரச்சினைகள் யாவும், இலட்சியத்துக்குத் துணை தேடும் அளவுக்கே கவனிக்கப்படுகின்றன. ஒரே நோக்கமாக, இந்த இலட்சியத்தைக் கொண்டிருக்கிறோம். திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு, மத, சமுதாய, பொருளா தாரப் பிரச்சினைகளிலே பலவகையான கருத்துகளும் திட்டங்களும் உண்டு என்ற போதிலும், இவை யாவும் இசைக்கு உள்ள 'சுருதி' போலத் திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்துக்குத் தக்க விதமாகவே அமைத்துக் கொள்ளப்படுகின்றன.

உறுதி கொள்ள ஒரு நாள்

இந்த இலட்சியத்தை நாம் கைவிடப் போவதில்லை என்ற நமது உறுதியைத் தெரிவிக்கவும், இந்த இலட்சியம் நிறைவேறா முன்னம், இடையிலே வீசப்படும் சில்லரை களைக் கண்டு திருப்திப்பட முடியாது என்பதைத் திட்ட மாகத் தெரிவிக்கவும். திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாட்டம் ஏற்பாடாகிறது: இந்தச் சமயத்தில், திராவிட நாடு திராவிடருக்கே என்ற நமது இலட்சியம்

வளர்ந்த விதத்தைக் கவனப்படுத்திக் கொள்ள விரும்புகிறோம்.

உரிமை முழக்கத்தில் உயிர் துறந்த வீரன்

முப்பது ஆண்டுகளுக்கு முன்பே, இங்குத் திராவிடர் என்ற உரிமை முழக்கம் கிளம்பிற்று. ஆனால், அந்த முழக்கம் மாளிகை வாசிகளின் தொடர்பினால் கெட்டு விட்டது. இந்த நாடு திராவிட நாடு - இங்குள்ள நாம் திராவிடர் - என்ற முழக்கத்தை மக்கள் மன்றத்திலே, தமது கடைசி மூச்சு இருக்கும் வரை செய்து வந்தவர் டாக்டர் சி.நடேச முதலியார். அவர் தொடங்கிய அந்த அரிய இயக்கத்தினால் உண்டான வேகத்தை, உண்மையான விடுதலைக்குப் பயன்படுத்திக்கொள்ளாமல், அரண்மனை களிலே வீற்றுக்கொண்டு அரசியலை நடத்தி வந்த சீமான்கள், பட்டம், பதவிகளுக்கு இத்ந வேகத்தைப் பயன்படுத்திக் கொண்டதுடன், தங்களுடைய முழுத் திறமையும், காங்கிரசைக் குறை கூறவும், அதே நேரத்தில் பிரிட்டிஷாருக்குத் துதி பாடவுமே உபயோகப்பட வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்களாக இருந்தனர். எனவே, திராவிடர் என்ற உரிமைச் சொல் திராவிட அரசு அமைக்கும் பரணியாகாமல் சர்க்கார் காரியாலயக் கதவைத் தட்டும் சுயநலச் சத்தமாகிவிட்டது. டாக்டர் நடேச முதலியார் உள்ளம் உடைந்தே மாண்டார்! இருந்த வரையில் அவர் திராவிடன் என்று பேசத் தவறியதில்லை.

ஆரியத்தை அகற்ற ஆர்வம் காட்டாத தலைவர்கள்

அந்த நாள்களிலே ஆங்கிலேத்திலே S.I.L.F. என்றும் ஜஸ்டிஸ் என்றும் மாளிகைகளில் வழங்கி வந்தது. மக்களின் முன்பு, திராவிடன் என்ற பெயரே வழங்கப்பட்டது. தமிழ்ப் பத்திரிகையின் பெயரே 'திராவிடன்' திராவிடக் கலை, திராவிட மதம், திராவிட வைத்தியம், திராவிட இசை

வாணர்கள் - என்றெல்லாம், அந்த நாளில் பலர், பல்வேறு துறைகளிலே திராவிட மறுமலர்ச்சிக்காகப் பணிபுரிய முனைந்தனர். ஆனால், அந்த அடிப்படை வேலையில் ஆர்வம் காட்டத் தலைவர்கள் தவறிவிட்டனர். அவர்கள் தங்கள் ஆற்றலை எல்லாம் அரசியல் அதிகாரம் எனும் மாய மானைப் பிடிக்கவே செலவிட்டனர். அதனால், அவர்கள் ஒவ்வொரு நகரிலும், பிரமுகர்களைச் சந்தித்தபோது, தேர்தலைப் பற்றிப் பேசி வந்தனரே தவிர உத்தியோகத் துறையிலே ஐயர்களுக்கு ஆதிக்கம் இருக்கிறது, அதை ஒழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தனரே யொழியச் சமுதாயத்திலே படிந்து கிடந்த ஆரியத்தை அகற்ற, திராவிட உணர்ச்சியை ஊட்டப் பணிபுரியவில்லை.

அந்த நாள் தலைவர்கள் மக்களுக்குப் புதிராயினர்

சமுதாயத் துறையிலே பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்துவது ஆபத்தல்ல; அரசியல் ஆதிக்கம் பெற்றுள்ள பார்ப்பனர்களாலேயே நமக்கு ஆபத்து - என்று வெளிப் படையாகவே அந்த நாள் தலைவர்கள் பேசிவந்தனர். தலைவர்களின் பேச்சு அவ்விதமிருந்தது. டாக்டர் நடேச முதலியார் போன்ற ஒருவரிருவர் தவிர; அதேபோது மக்களுடன் பழகிப் பிரச்சாரம் புரிந்து வந்த ஜே.என். இராமநாதன், கண்ணப்பர், டி.வி. சுப்பிரமணியன் முதலியவர்கள், திராவிடன் என்ற உணர்ச்சியை ஊட்டியும் அரசியலிலே மட்டுமல்லாமல், சமுதாயத் துறையிலே பார்ப்பனர்கள் பெற்றிருந்த ஆதிக்கத்தை விளக்கிக் கண்டித்தும் வந்தனர். மக்களை அவர்கள் திராவிடர்களாக வாழும்படி வலியுறுத்தி வந்தனர். தலைவர்களோ, மக்களைப் பார்ப்பனருக்கு எதிராக "ஓட்" கொடுக்கும் அளவுக்குத் தான் உபயோகித்தனர். எனவே, மக்களுக்கு அந்தத் தலைவர்களின் போக்கு முதலில் புரியவில்லை, புரிந்த பிறகு பிடிக்கவில்லை; பிடிக்காததால் விலகினர்.

மாயமான் வேட்டையில் "மாடமாளிகைக்காரர்கள்"

திராவிட இன உணர்ச்சிக்காக எடுத்துக்கொண்ட முதல் முயற்சி முறியடிக்கப்பட்டது. மக்களும் ஆர்வமும் ஏற்படாமல் போனதால் அல்ல. நம் தலைவர்கள் அரசியலை மட்டுமே கவனித்துச் சமுதாயத்தில் தலையிடுவதைத் தவறு என்று எண்ணியதால். ஒரு இருபதாண்டுகள் மாயமான் வேட்டையில் - மந்திரிப் பதவி அமைப்பதில், அதாவது சுயநல வேட்டைக்கு, அதன் விளைவாக, சதியாலோசனைகளுக்குச் செலவிடப்பட்டன. அந்தக் காலத்திலே, மாளிகை சதியாலோசனை மண்டபங்க ளாயின! ஆள் தூக்கிகள் அரசியல் சூத்திரதாரிகளாயினர்! பதவி தேடுவோர் அரங்கமேறினர். பரங்கிக்கும் கொண்டாட்டம். மக்கள் இந்தக் காரியம் தங்களுக்கு அல்ல என்பதைத் திட்டமாகத் தெரிந்து கொண்டு கட்சியைக் கண்டிக்கவே தொடங்கினர். மாளிகைகளிலே சதிச் செயல்கள், கட்டுக்கடங்கா நிலைபெற்று ஒரு தலைவர் இன்னொரு தலைவரை வீழ்த்துவதையே தொழிலாகக் கொண்டு, ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு கும்ப லாகச் சாய்ந்தனர். அந்த அதிர்ச்சியிலே, ஆரம்பத்திலே ஆர்வத்துடன் கிளம்பிய திராவிட இன உணர்ச்சி மங்கிற்று; மடியவில்லை. அந்த உணர்ச்சி, என்றுமே மடிந்ததில்லை - அடிக்கடி மங்கி இருக்கிறது. ஏனெனில், அந்த உணர்ச்சி, உள்ளத்தின் பேச்சு - அரசியல் வெட்டுக்கிளிகளின் கூச்சல் அல்ல.

ஆரியத்தின் அணைப்பில் அவதியுற்ற திராவிடம்

இங்கு நெடுங்காலமாகவே, ஆரியத்தின் அணைப்பி லிருந்து விடுபட, திராவிடம் பலமுறை முயன்றிருக்கிறது. சில நேரத்தில் செயலற்று இருந்தது என்றபோதிலும், அடியோடு சரண் புகுந்ததில்லை. அடிக்கடி தனித்தமிழ்,

வேளாள நாகரிகம், உண்மைச் சைவம், பண்டை நாகரிகம் என்று பல்வேறு தலைப்புகளிலே கிளம்பிய இயக்கங்கள் யாவும், மூல முயற்சியின் சிறு சிறு பதிப்புகளேயாகும். இவை ஒவ்வொன்றும் தேவை, பலனுமுண்டு இவற்றால் என்ற போதிலும் இவை மக்களுள் ஒரு சிலரால் மட்டுமே உணரக்கூடியதாக இருந்த காரணத்தால், மூல முயற்சியை இந்த இயக்கங்கள் பலப்படுத்த முடியவில்லை. ஒவ்வொன்றும் தனித்தனி இயக்கங்களாக மாறிவிட்டன. முரண்பாடுகளாகவும் தெரியலாயின. விரோத உணர்ச்சியும்கூட வளர்ந்தது. தமிழகத்திலே, பல முகாம்கள் தோன்றலாயின! மூல முயற்சியை மறந்து விட்டனர்.

மடிந்த உணர்ச்சி கண்டு மாற்றார் மனமகிழ்ந்தனர்.

கண்ணைக் கட்டிவிடப்பட்ட வீரன், சாலையிலே நடந்து செல்கையில், மரத்துக்கு மரம் மோதிக்கொண்டு சங்கடப்படுவதைப் போல, நாடு இருந்தது. மீண்டும் ஒருமுறை திராவிட இன உணர்ச்சி தோன்றுமா என்பதே சந்தேகமாகிவிட்டது. அந்த உணர்ச்சி அடியோடு மடிந்து விட்டது என்று மாற்றார்கள் மகிழவும் செய்தனர். ஆனால், இலட்சியம் மடியவில்லை - சமயத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தது. பலப்பல சமயங்கள் வந்தன - ஆனால், சரியான சமயங்களாகவில்லை.

தாழ்ந்த தமிழகம் தன்னார்வம் கொண்டது

இந்தி எதிர்ப்புப் போராட்டம் தக்க சமயமாயிற்று. நாடு எங்கும், காங்கிரசுமீது கோபம் மட்டுமல்ல அந்த அளவு குறைவுதான் - தமிழ்ப்பற்று, பரவிய காலம். எங்கும் சங்க நூற்களைப் படிக்க ஆரம்பித்த காலம். தமிழனுக்குத் தனியாக ஒரு மொழிஉண்டு, தனியான பண்பு உண்டு என்ற பெருமையைப் பேசலாயினர். ஐம்பெருங் காப்பியத்தைப் பற்றிய பேச்சுப் பொது மேடைக்கு வந்துவிட்டது! ஆர்வம்,

தமிழ்மீது அதிகமானதும், இடையே புராணீகர்களும் புகுந்துகொண்டனர். ஆனால், அவர்களின் ஆதிக்கம் வளர முடியாதபடி, தமிழ் ஆர்வம் கொண்டவர்கள் தமிழ்மொழி தாழ்வுற்ற காரணம் என்ன, தமிழ்ப்பண்பு மறைந்த காரணம், தமிழகச் சிறப்பு தேய்ந்த காரணம் ஆகியவற்றை ஆராயத் தொடங்கினர். அந்த ஆராய்ச்சி, அவர்களை விட்ட இடத்தில் கொண்டுவந்து சேர்த்தது - அதாவது டாக்டர் நடேச முதலியாரின் கல்லறைக்கு அருகே கொண்டு வந்து நிறுத்திற்று. பழைய நினைவுகள், பழைய பரணிகள் மீண்டும் உலவலாயின!

வாடிய தமிழ்ப்பயிர் செழிக்க
"வாய்க்கால் வெட்டிய" வீரர்கள்

தமிழ் மொழியைக் காப்பாற்ற ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறை சென்ற காட்சி, தமிழரின் உள்ளத்திலே, ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. தாளமுத்து, நடராசன் கல்லறைமீது தமிழர் கண்ணீர் சிந்தினர். இரு வாலிபர்களுக்குச் சாவு, பல வாலிபர் களுக்குச் சிறை, எல்லாம் தமிழ் மொழியின் பாதுகாப்பின் பொருட்டு என்பதை அந்தக் கல்லறையின் பக்கம் நின்று சிந்தித்தபோதுதான், இந்நிலை மாறவேண்டும் என்ற உறுதி தமிழருக்குப் பிறந்தது. அப்போதுதான் "தமிழ்மொழிக்குப் பிற மொழியால் ஆபத்து என்று அலறுகிறாயே தோழனே! ஏன் வந்தது அந்த ஆபத்து, யாரால் வந்தது என்பதை எண்ணிப் பார். மொழிக்கு மட்டும்தானா, கலைக்கு, நெறிக்கு, பண்புக்கு இனத்துக்கு, நாட்டுக்கு உன் வாழ்வுக்கு ஆபத்து வந்திருக்கிறதே அதைத் தெரிந்துகொண்டாயா? எவரால் வந்தது இந்த ஆபத்து என்பதை அறிவாயா? ஏன் வந்தது என்பதை யோசிப்பாயா? நான் கூறுகிறேன் கேள். தமிழ்நாடு தமிழனிடம் இல்லை. ஆகவேதான் தமிழ

னுடைய பொருள் தமிழனிடம் இல்லை. பிற நாட்டார்ன் எண்ணுகிற எண்ணமெல்லாம் இங்கு இப்போது சட்டமாகிவிடுகிறது. பிறநாட்டானின் பொருளுக்கு இது மார்க்கட்டாகிறது. இந்நிலை மாறவேண்டும் - மொழிப் போராட்டம் மட்டும் போதாது - இது முடிவல்ல; தொடக்கம்" இந்தியை விரட்டினால் மட்டும் போதாது, தமிழ் நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தும் தீய சக்திகள் யாவும் தொலைய வேண்டும் - அதுவே நமது முழக்கமாக வேண்டும் - இனி அதுவே நமது போர் - நமது இலட்சியம் - தமிழ் நாடு தமிழருக்கே!" என்று பெரியார் இராமசாமி முழக்கமிட்டார். ஆம்! ஆம்! அறிந்தோம்! தெளிந்தோம்! என்று அன்று கடற்கரையிலே கூடிய இலட்சத்தை எட்டிப் பார்த்த பெருந்தொகையினரான மக்கள் முழக்கமிட்டனர்; உறுதி கொண்டனர். மக்களின் மனக் குமுறலைக் காட்டுவது போலக் கடலலை ஒலித்தது. மேலே நிலவு, தமிழரின் விழிப்புற்ற நிலையை விளக்குவது போல! வானத்திலே இங்குமங்கும் மேகங்கள், தமிழ்ச் சமுதாயத்திலே உள்ள கறைகள் போல! தமிழன் மீண்டும் தன் இலட்சியத்தைப் பெற்றுவிட்டான். தமிழ்நாடு தமிழருக்கே என்று முழக்கமிட்டான். மங்கியிருந்த இலட்சியம், மீண்டும் உலவலாயிற்று! இம்முறை நேரடியாக, மக்கள் மன்றத்துக்கு இலட்சியம் போய்ச் சேர்ந்தது! ஆகவே, அந்த இலட்சியத்துக்குப் புதியதோர் சக்தி ஏற்பட்டுவிட்டது. மக்களுக்குத் தாங்கள் ஒரு இலட்சியத்துக்காகப் பணியாற்றப் போகிறோம் என்ற ஆர்வம் ஏற்பட்டது மாளிகைக்கு அல்ல, பதவிக்கு அல்ல, நம் நாட்டின் தனி உரிமைக்குப் போராடப் போகிறோம் என்று எண்ணலாயினர்! அந்த எண்ணம், புரட்சிக் கவிஞரின் பொன் மொழிகளினால், மேலும் உரம் பெற்றது.

"ஆடுவமே பள்ளுப் பாடுவமே தமிழ்
ஆட்சியின் மாட்சியில் கூடுவமே!"

என்றார் கவிஞர்! ஆயிரமாயிரம் இளைஞர்களின் விழிகளிலே களிப்புக் கூத்தாடலாயிற்று. தேர்தல், சட்ட சபை, மந்திரி சபை முதலியன அவர்களின் பார்வைக்கு மிக மிகச் சாமான்யப் பொருள்களாயின. அந்தப் பொருள் களுக்காக ஆவல் கொண்டிருப்பவர்கள், இளைஞர்களின் கண்களிலே, சேலத்தில் கேலிச் சித்திரங்களாகத் தெரியலாயினர். தடைகளைச் சங்கடங்களை மீறி இளைஞர்கள் அந்த இலட்சியத்தை நோக்கி நடக்கலாயினர். புதிய பாதை கிடைத்துவிட்டது என்ற பூரிப்புடன் தமிழன் தன் மொழி, கலை இவற்றைக் காப்பாற்ற, நாட்டை மீட்டாக வேண்டும் என்பதைக் கண்டறிந்து கூறிய போர் முழக்கம், தமிழ்நாடு தமிழருக்கே என்பது!

ஏளனம் பேசியோர் "எரிமலை" கண்டனர்

எலிவளை எலிகளுக்கே என்றனர், ஏளனம் பேசியே எதையும் ஒழித்துவிடமுடியும் என்று எண்ணிய அறிவாளிகள்! மக்களோ தமிழ்நாடு தமிழருக்கே என்பதை உச்சரிக்கலாயினர். உண்மைதானே, நியாயம்தானே, அவசியம்தானே என்று கூறிக்கொண்டனர். கூறிக் கொண்டே மேலும் யோசிக்கலாயினர். இன்று எப்படி இருக்கிறது தமிழ்நாடு என்று. சர்வம் ஆரியமயமாக இருக்கக் கண்டனர் - எப்போது இருந்து இந்த நிலை என்று ஆராயத் தொடங்கினர் - தமிழன் ஆரியத்துக்கு இடங்கொடுத்த நாள்தொட்டு இந்நிலை என்பதறிந்தனர். அதற்கு முன்பு எந்நிலை என்று ஆராய்ந்தனர் - முப்புறம் கடலும் வடபுறம் விந்தியமும் அரணளிக்க, அழகு திராவிடம், ஆற்றலுடன் விளங்கியிருந்ததைக் கண்டறிந் தனர். திராவிடத்தின் ஒரு பகுதி ஆந்திரராகிப் பிறிதொரு

பகுதி கேரளமாகிவிட்டதைக் கண்டனர் - பிரிந்தாலும் இவற்றுக்கிடையே மொழிவழியாக ஒருமைப்பாடு இருத்தலைக் கண்டனர் - பண்டைத் திராவிடத்தை நினைவிற் கொண்டனர் - ஆரியத்துக்கு எதிர்ச் சொல்லாக - ஆரியர் என்ற கலாச்சாரத்துக்கு முற்றிலும் மாறான கலாச்சாரத்தை உணர்த்தும் குறியாக - திராவிடம் என்ற சொல் இருக்கக் கண்டனர். சரிதமும், பூகோளமும், மக்கள் உளப்பண்பு நூலும் இந்த உண்மைக்கு ஆக்கம் அளித்திடக் கண்டனர்! ஓஹோஹோ கண்டோம் உண்மையை என்றனர். திராவிட நாடு திராவிடருக்கே என்றனர். இலட்சியம் முழு உருவம் பெற்றது! இன்று அந்த இலட்சியத்தை ஆதரிக்கத் திராவிடநாடு திராவிடருக்கே என்று கூறமட்டும் கூச்சப்பட்டுக் கொண்டு, மாகாண சுதந்திரம், மாகாண சுயாட்சி சிலர் பலர் கூறுவர். சிலர், முழு உரிமை நமக்கு. ஆனால், அகில இந்தியத் தொடர்பு வேண்டுமன்றோ என்பர். அவர்களின் வார்த்தையிலே உள்ள வளைவு நெளிவுகள் அல்ல. முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியவை - அவர்கள் இலட்சியத்தை நோக்கி நடந்து வருகிறார்கள் என்பதே முக்கியம்.

பித்தம் தெளிந்தும் சிந்திக்க மறுத்தார்

தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவர், நாம் திராவிடப் பிரிவினை நாள் கொண்டாடும் சமயமாகப் பார்த்து, "திராவிட நாடு தனிநாடு ஆகவேண்டும் என்ற திட்டம், நாட்டை மேலும் பிளவுபடுத்துவதாகவே முடியும்" என்று கூறினார். அதாவது நண்பர் காமராசர் நமது திட்டத்தின் விளைவு என்ன என்பதைக் கூறுகிறார். ஏன் அந்தத் திட்டம் தேவைப்படுகிறது என்பது பற்றிச் சிந்திக்க மறுக்கிறார்; ஒருவேளை சிந்தித்து உண்மையைக் கண்ட பிறகு, மறைக்கிறாரோ என்னவோ! நமது விஷயத்தில் வடநாட்டுத்

தலைவர்கள் குறுக்கிட்டபோது, காமராசருக்கு மேலிடத்தின் மீது எவ்வளவு கோபம் வந்தது; நாம் அதே மேலிடம், உள்நாட்டு விவகாரத்தில், கலையில், நாகரிகத்தில், முக்கியமாகப் பொருளாதாரத் துறையிலே நுழைந்து ஆதிக்கம் பெறுவதைக் கண்டு, கோபிப்பது குற்றமாகுமா என்பதை அவர் யோசிக்க வேண்டும். அவருக்குள்ள பல தொல்லைகளுக்கிடையே அவகாசம் கிடைப்பது அரிது என்றாலும், கொஞ்சம் அவகாசம் ஏற்படுத்திக்கொண்டு, நம் தலைவரிடம் பேசினால், திராவிட நாடு ஏன் தனி நாடாக வேண்டுமென்று கூறுகிறோம் என்ற காரணங்களைத் தெரிந்து கொள்ளலாம். பிறகு அவர் தமது கருத்தை வெளியிட்டால் பொருத்த மிருக்கும். ஒரு பிரச்சினையை அதன் விளைவை முன்கூட்டித் தாமாகக் கற்பித்துக் கொண்டு கவனிப்பது சரியான முறையல்ல.

இந்தப் பிரச்சினையைக் கவனிக்கும்படி, காரணங் களை ஆராயும்படி காமராசர்களை அழைக்கும் நாள்தான் ஜூலை 1-ந் தேதி.

தனி அரசுரிமையிலே "தன்னலம்" தோற்றமேன்?

திராவிடஸ்தானால், நாடு துண்டாகும் என்று சொன்னவர், அதேபோது, நமது இலட்சியத்தின் அருகே வந்து போகிறார், தெரிந்தோ தெரியாமலோ! அவர் கூறியிருக்கிறார். ஆந்திரம், கேரளம், தமிழகம் ஆகியவை தனிச் சுதந்திர அமைப்புகளாகி இந்திய சமஷ்டியோடு கூடி வாழவேண்டும் என்று Independent Units தனி உரிமையுள்ள அங்கங்கள் என்கிறார். ஏன், அந்த ஆசை பிறந்தது? தனி உரிமை கோரக் காரணம் என்ன? இப்போதுள்ள நிலைக்கும், தனி உரிமை பெற்றால் ஏற்படும் நிலைமைக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? இதனை அவர்

விளக்கவில்லை! அது மட்டுமல்ல, அவருடைய 'ஆசைக்கு' நேர் மாறாக இப்போது அ.நி. சபையில் இந்த 'அங்கங்கள்' பங்கப்படுத்தப்படுகின்றன என்பதையும் அவர் மறைக்கிறார்; தடுக்க முடியாத காரணத்தால்! தனி அரசுரிமை கோருகிறார்; நாம் அதிலே மாசு மருவற்ற நிலை கேட்கிறோம். அவர், தனி அரசுரிமை பெற்றாலும் இந்திய சமஷ்டியிலே சேரவேண்டும் என்கிறார். இந்திய சமஷ்டி மட்டுமல்ல நேரு கூறும் ஆசிய சமஸ்டியானாலும் சரி, வெண்டல் விளக்கிக் கூறிய உலக சமஸ்டியானாலும் சரி, சேருவோம்; தவறில்லை; தடையில்லை. ஆனால், தனி அரசுரிமை வேண்டுமே. எங்கே அதற்குத் திட்டம் - திட்டம் தீட்டிவிடுகிறார்களே அ.நி. சபையில்! அது காமராசரின் ஆவலைப் பூர்த்தி செய்யக் கூடியது அல்லவே! அதற்கு என்ன சொல்லுகிறார் அன்பர்?

எதிர்ப்பாளர்கூட "இலட்சியம்" பேசக் கண்டோம்

திராவிடஸ்தான் கூடாது என்று பேசுமுன்பு, ஏன் கேட்கிறார்கள் என்பதைப் பொறுப்பான இடங்களில் உள்ள காங்கிரசு தலைவர்கள் கேட்டறிய வேண்டும். அதற்கு அழைப்புச் சீட்டுதான், விழா நாள். நம் இந்திய இலட்சியத்தை எதிர்ப்பதாகக் கூறும் நண்பர்களின் வாய்மொழிகளிலேகூட நமது இலட்சியத்தின் சாயல் இருக்கக்கண்டு மகிழ்கிறோம். இந்நிலைக்குக் காரணம் என்ன? இலட்சியம் வளர்ந்துவிட்டது - எதிர்பாராத இடங்களிலெல்லாம் அதன் மணம் இருக்கக் காண்கிறோம். இனிச் சிலகாலம் நமது இலட்சியத்தை விளக்கிக் - குறிப்பாக அதற்கான பொருளாதாரக் காரணங்களை விளக்கிக் கூறினோமானால், திராவிட நாடு திராவிடருக்கே என்பது கட்சி முழக்கம் என்ற நிலை மாறி, நாட்டு முழக்கமாகும். பல தடைகளை மீறி வந்துள்ள இலட்சியம்

இந்த முழு உருவுடன் விளங்கத்தான் போகிறது. ஏனெனில் இந்த இலட்சியம் விழிப்புற்ற மக்களின் உரிமை முரசொலி - கட்சிப் பேச்சல்ல.

சகித்துக்கொண்டோம் ! பின்னர்ச் 'சல்லடம்' கட்டுவோம்.

இராமகிருஷ்ணர் படங்கள், கல்கத்தாவில் அச்சாகி நமக்குக் கிடைத்து, டால்மியா சிமிட்டி பூசப்பட்ட சுவரிலே டாட்டா கம்பெனி அனுப்பும் ஆணியை அடித்து மாட்டும் போதெல்லாம் இந்த இலட்சியம், மெல்ல காதருகே நின்று கேட்கும் "இதுதான் உன் நிலையா? உன் நாட்டிலே இரும்பு, இல்லையா?" என்று! கேட்டுவிட்டுச் சிரிக்கும்! ஷோலாப்பூர், பம்பாயிலிருந்து வேட்டியும், சேலையும் இலாகூருக்கும் பிஷாவாருக்கும் போக முடியாததால், அதிகமாக இங்கே வருகிறபோது, இலட்சியம் கவனத்துக்கு வரும்! வங்காள இரசாயன சாலையிலிருந்து வரும் மருந்துவகை இலட்சியத்தைக் கவனப்படுத்தும்! வெளி உலகுடன் நடத்தும் வியாபாரமும், கொள்ளும் தொடர்பும் விந்தியத்துக்கும் மேலே உள்ளவர்களோடு முடிந்து விடுகிறபோது, இலட்சியம் கவனத்துக்கு வரும். முதலில் கொஞ்சம் தயக்கம், பிறகு தைரியம் உண்டாகும். நாம் எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் "இந்த வடநாட்டு ஆதிக்கத்தை நம்மால் சகிக்க முடியவில்லை; திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்" என்ற இலட்சியம் பேசப்படும் அந்த நாளைக் காணவே இந்த நாள்களில் ஏற்படும் இழிவுகளை, பழிகளை, எதிர்ப்புகளை, ஏளனங்களைச் சகித்துக்கொள்கிறோம் - சகித்துக்கொள்வோம் - நாம் அல்ல இதிலே முக்கியம், நாடு!

போர்வாள்

29,30-8-1945 ஆகிய இரு நாள்களில் திருச்சியில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை.

திருச்சியிலே! அதற்கு அடுத்த கிழமை நாம் கூடினோம். அங்கே ராஜ கோலாகலங்கள் இல்லை! மிட்டா மிராசுகளும், ஜெமீன் ஜரிகைக் குல்லாய்களும் இல்லை! மாநாட்டுப் பந்தலிலே வந்திருந்த தாய்மார்களின் தங்கக் கட்டிகள் தூங்குவதற்கு 'ஏணைகள் கட்டிவிடப் பட்டன! கொலு வீற்றிருக்கும் ராஜா கொடுத்த 2000த் துக்காக, அவருடைய கோணல் சேட்டையைச் சகித்துக் கொண்டிருந்தனர், காங்கிரசில் - இங்கோ, அழுகிற குழந்தையை முத்தமிட்டுச் சத்தம் வெளிவராதபடி தடுத்த தாய்மார்களைக் கண்டோம்; பெருமையும் பூரிப்பும் கொண்டோம். நாட்டுப் பற்றுக்கு நாயகர் என்று கூறிடுவோர், அங்கு ஓட்டு வேட்டைக்கான ஓங்காரச் சத்தமிட்டனர் - இங்கோ, நலிந்து கிடக்கும் இனத்துக்கு நல்லதோர் மூலிகை தேடிடும் நற்காரியத்தில் ஈடுபட்டோம். அங்கு அரசாள வழி காணக் கூடினர்; இங்கு அறிவு வளர வழி கண்டனர். அங்குப் பதவி தேடிடும் பண்பினர் கூடினர்; இங்கு இனத்தின் இழிவு துடைக்க எத்தகைய கஷ்ட நஷ்டமும் ஏற்கத் தயார் என்று உறுதி கூறிய வீரர் கூடினர். அங்கு வெள்ளை ஆடை அணிந்தவரின் விழா; இங்குத் துயர் கொண்ட திருஇடத்தின் இழிவைக் குறிக்க இனிக் கறுப்பு உடை தரித்து, விடுதலைப் போர் தொடங்குவோம் என்று சூள் உரைத்த வாலிபர்களின் அணிவகுப்பு. அங்கு

அறுவடை; இங்கு உழவு; அங்கு பேரம்; இங்கு வீரம்; அங்குக் காங்கிரசு; இங்குத் திராவிடர் கழகம்; செல்வம் கொழிக்கும் பம்பாய் நகரிலே, தாஜ் ஹோட்டல் என்ன! ராயல் ரெஸ்டாரன்ட் என்ன! ரம்மியமான பல விடுதிகள் என்ன! இவ்வளவு வசதிகள்! செல்வவான்களுக்குத் தேவையான சுவைகள்! இங்கோ வெட்ட வெளியிலே, ஒரு கொட்டகை! கொட்டகைக்கும் நகருக்கும் இடையே இரண்டு மைல் தொலைவு! மாநாட்டார் சாப்பாடு போட இல்லை! தங்கப் போதுமான விடுதிகள் இல்லை! மழைத் தொல்லையோ தெரியவில்லை! இடியும் மின்னலும், அதிகார வர்க்கத்தின் அமுலும், அமோகம்! மாநாட்டுக்கு மகா ராஜாக்களும் பட்டமகிஷிகளும் இல்லை! அலங்கார புருஷரும் அவரை அடக்கியாளும் மெழுகு பொம்மைகளும் இல்லை! ஒரே ஒரு மோட்டார்! அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தது; அதுவும் வாடகை வண்டி!

பதவி பெறாத பாதை வகுத்தனரா? இல்லை! இருக்கும் பதவியை விட்டுவிடு. இல்லையேல் விலகி நில் என்று கூறினர்! தேர்தல் முஸ்தீப்புகள் உண்டா? இல்லை! தீண்டினால் திருநீல கண்டம்!! மாஜி மந்திரிகள் உண்டா? தென்படவில்லை! மிட்டா மிராசுகள் உண்டா? இல்லை! 'காருண்ய மிகுந்த' சர்க்காருக்குக் காவடி தூக்குவோர் உண்டா? இல்லை! வேறு யார் இருந்தனர்? வெள்ளம்போல் தமிழர் கூட்டம்! அவர்கள் கூடிப் பேசி வகுத்த வழி என்ன? **"நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம். இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்"** - என்று கூறினர். கொலை வாளினை எடடா! "மிகு கொடியோர் செயல் அறவே" என்று பாடினர். திராவிடத் திருநாட்டினிலே ஆரிய அரசா? அதற்குப் பார்ப்பன முரசா? என்று கேட்டனர். சர்க்கார் சனாதனத்துக்கு இடந்தரும் போக்கைச் சாடினர்; பெரியாரே, இப்பெரும் படைக்குகந்த தலைவர் என்று

தேர்ந்தெடுத்தனர். களம் காட்டுக என்று முழக்கமிட்டனர், கடும் பத்தியத்துக் கெல்லாம் தயார் என்று உறுதிமொழி புகன்றனர்; போர்க்கோலம் பூண்டுவிட்டனர்; போயுள்ளனர். தத்தமது பட்டிதொட்டிகளிலும், "திராவிடரின் விடுதலைப் படையிலே நாங்கள் பெயரைப் பொறித்து விட்டோம்! எந்தச் சமயத்திலே அழைப்பு வருமோ அறியோம். வந்தால் வாளாயிரோம், அது மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை; நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலையாக இருக்கக் கூடும்; எதுவாக இருக்குமோ தெரியாது! ஆனால் எதற்கும் நாங்கள் தயார் என்று உறுதி கூறிவிட்டோம்" என்று உரைத் திடுவர். திருச்சி தீரர்களின் அணிவகுப்பைக் காட்டிவிட்டது! இரயில்வே வசதிக் குறைவு. காலநிலைக் கோளாறுகள் இவ்வளவையும் பொருட்படுத்தாமல், அங்குக் கூடிய ஏறக்குறைய நாற்பது ஆயிரம் மக்களும், நமது நாட்டு விடுதலைக்கான படை அதனைத் தடுக்கும் தடை இருக்க முடியாது.

கட்சியின் குறிக்கோள் கெட்டுவிட்டது என்று மேதாவிகளிலே ஒருவரான சிலப்பதிகார உரையாசிரியர் சர்.சண்முகனார் முழக்கமிட்ட பிறகு ஞாயிறு நோக்கி நாத்தழும்பேற நிந்தித்த பிறகு, கிழமைதோறும் இந்தக் கிழத்தை நாங்கள் கவிழ்த்துவிட்டோம் என்று வளையுள் நெளியும் சுளை விழுங்கிகள் சொல்லம்புகளை விட்ட பிறகு, ஜல்லடம் கட்டிய வீரரும், புகலிடம் தேடிடும் வீணரும் கனலைக் கக்கிய பிறகு, சர்களும், திவான் பகதூர்களும் விருந்துண்டு, விருது புகன்று, வீர ரசம் பருகி விட மாட்டோம் என்று ஆவேசம் பேசிய பிறகு, கட்சியிலே பிளவு என்று கலகப் பிரியர்கள் பேசிய பிறகு, காட்டுக் கூச்சலிடுவோர்தாமே மிச்சம். கண்ணியமானவர்கள் எங்கே என்று கனத்த குரலினர் கூறிய பிறகு, காட்சி கரைந்து விட்டது என்று கேலி பேசிய பிறகு, இந்தக் காட்சி, மக்கள்

பலப்பல ஆயிரவர் கூடிய காட்சி, பட்டம், பதவி, தேர்தல் முதலிய பசையும் ருசியும் இல்லை என்று தெரிந்தும் கூடிய கோலம், சிறையும் பிறவும் கிடைக்கும் என்று தெரிந்தும், கூடிய கூட்டம், சர்வாதிகாரம் செய்கிறார். யாரையும் சட்டை செய்ய மறுக்கிறார் என்று பெரியாரைப் பற்றிக் கூறப்படுவது தெரிந்தும் கூடிய கூட்டம், அமைப்பு இல்லை. ஆங்கில - தமிழ்த் தினசரிகள் இல்லை, ஆந்திர, கருநாடகம் போகவில்லை, பணம் பெறும் பிரசாரகர்கள் இல்லை. இவை கட்சியிலுள்ள குறைபாடுகள் என்று சிலர் கூறினது தெரிந்தும் கூடிய இந்தக் கூட்டம், தவறான வழியிலே சென்றுகொண்டிருக்கும் ஒரு சிலருக்குக் கண்ணையும் கருத்தையும் திறந்திடும் காட்சி என்போம்! சேலத்திற்குப் பிறகு, கட்சியிலே பிளவு, பெரியாரின் பலம் ஒடுங்கிவிட்டது. பிளவு பலமாகிவிட்டது என்று, கொட்டை எழுத்திலே அச்சிட்டுவிட்டுப் பெரியாரின் செல்வாக்கு அதனால் பட்டுப் போய்விட்டதாகக் கருதிக் கொண்டனர் சிலர்! அவர்களின் சிந்தனைக்கு ஒரு சிக்கலான வேலை. இந்தத் திருச்சி மாநாட்டுக் காட்சி! ஏன் கூடினர் இவ்வளவு மக்கள், எவ்வளவோ வசதிக் குறைவு இருந்தும்? கட்சியிலே பிளவு என்பது இந்த விளைவையா தரும், பிளவு என்பது உண்மையாக இருக்குமானால்? ஒரு சிலர் வழக்கமாகக் காணப்படுபவர், வருவதற்கு ஆரூடர் பார்த்து, ஆள் அம்பு அனுப்பி, தங்கியிருக்கப் பங்களாவும், தர்பாருக்கேற்ற "தாசர்" கூட்டமும் தலையிலே பாகையும், தடியிலே தங்கப்பூணும் கொண்ட சீமான்கள் அங்கு இல்லை; ஆனால், சீறிப் போரிடும் சிங்கங்கள் இருந்தன! இதனை நண்பர் வேதாச்சலம், இராமநாதபுரம் ராஜா தலைவராகவும், தனவணிகர் குலதிலகர் பெத்தாச்சி செட்டியார் வரவேற்புக் கழகத் தலைவராகவும் இருந்து, ஜஸ்டிஸ் மாநாட்டை இதே திருச்சியில் 12 ஆண்டுகளுக்கு முன்பு நடத்தினர். இன்று நான் வரவேற்புத் தலைவனாக

இருக்கிறேன் - சாமான்யன்! பெரியார் தலைவராக இருக்கிறார். அவர் ராஜா அல்ல! என்று கூறினார். கோடி உள்ளங்களின் எதிரொலி அவருடைய வாசகம்! ஆம்! ராஜாக்களும், ஜெமின்தாரர்களும், இன்றைய திராவிடர் கழகம் நேற்று ஜஸ்டிஸ் கட்சி என்று அழைக்கப்பட்ட காலத்திலே, அக் கட்சியைத் தமக்குக் கொலுமண்டப மாகவே கொண்டனர்! இன்று அது மக்கள் மன்றமாகி விட்டது! நாளை, அந்த மக்கள் மன்றத்தின் மாவீரர்களின் எதிர்ப்பினால் "மஞ்சள் கறுப்பாச்சுதே! எங்கள் மனக்கோட்டை தூளாச்சுதே!" என்று பாடி அழப் போகின்றனர். இன்று ஓடி ஆடி அடாணா பாடும் கட்சியினர். மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், எங்களால் தாங்கக்கூடியவை அல்ல என்று சோகித்துக் கூறிக் கை பிசையும் "கனங்கள்" வாழ்ந்த இந்தக் கட்சியிலே, திருச்சி மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், போதுமான அளவு தீவிரமாக இல்லை, போர் வாடை அடித்தது. முரசும் கேட்டது. ஆனால் களம் செல் என்று கட்டளை காணோமே! ஏன் என்று பெருமூச்சு விட்டபடி, தோளைக் குலுக்கிடும் வீரர்கள் ஆயிரம் இருந்தனர்!

மூன்றடுக்கு மாடி வீடு, நமது கட்சியின் மூல புருஷர்கள் என்று கூறப்படுவோரின் முகாம்! இந்தி எதிர்ப்புப் போர் மும்முரம்! அந்தச் சமயத்திலே கூடியபோது இந்தப் போரை, ஜஸ்டிஸ் கட்சி எடுத்து நடத்த வேண்டும் என்று அந்தப் போரிலே ஈடுபட்டிருந்தவர்கள் கூறினர். கூறினதுதான் தாமதம். குளிர்ச்சி மறைந்தது; கொதிப்புக் கூத்தாடிற்று. கூடினது இதற்கா என்ற கேள்வி பறந்தது. எங்களால் முடியாது என்று பேசப்பட்டது! யாரால்! சிறைச்சாலைக்குச் சென்று "சீரழிய!" வாலிபர்களை அனுப்பிவிட்டுச் செல்வத்தின் துணை

யினால் சட்டசபை சென்று சிங்கார வாழ்வு நடாத்தும், சீமான்களால்! அன்றே "சேலம்" ஏற்பட்டிருக்க வேண்டும்! பெரியார் மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது கஷ்டப்பட்டார்! இது ஒட்டாச் சரக்கு என்பது அன்றே தெரிந்தது! தாட்சணியம் என்ற பசையால் ஒட்ட வைத்தார்! அதுவும் ஓட்டு வேலைக்காகவே தவிர, திராவிடத்தின் மானத்தை மயக்கும் ஆரிய எதேச்சதிகாரத்துக்கு வேட்டு வைக்க அல்ல! சேலம் மாநாட்டிலே, "சேலம் நடந்ததே" அது நெடு நாள்களுக்கு முன்பே நடந்திருக்க வேண்டிய சம்பவம், கொஞ்சம் காலங்கழித்தே நடந்தது! நடந்த பிறகு உள்ளபடியே அதனால் நமக்கு நஷ்டமோ என்று சிலருக்கு நம்மவரிலேயே சிலருக்குக் கூடச் சந்தேகமும். சஞ்சலமும் இருந்தது! அந்தச் சந்தேகத்தைத் திருச்சி துடைத்து விட்டது! இனி நமது பாதை தெளிவாகிவிட்டது; பயணத்தைத் தொடங்க வேண்டியதுதான் பாக்கி! அதுவும் விரைவிலேயே! நிச்சயம் தொடங்கப்படும்.

திருச்சி மாநாட்டிலே, நமக்கு ஏற்பட்ட உருவான பலன் இதுதான்; நமக்குப் பழைய கூட்டுறவுக்காரர்கள் விலகியதால் நமக்கு நஷ்டம் இல்லை! அந்தப் 'பழைய கூட்டாளிகளைக் கொண்டு அமைக்கப்படும் தேர்தல் காளான் நமது பாதையைத் தடைப்படுத்தக்கூடியதல்ல! நமது பாதை தெளிவாக்கப்பட்டுவிட்டது' என்பது, திருச்சி மாநாடு நமக்களித்துள்ள பாடம்! இனித் தயங்கவோ, திரும்பிப் பார்க்கவோ, தழுதழுத்த குரலுக்கோ, தாட்சணியத் தொல்லைக்கோ இடமில்லை; அவசியமும் கிடையாது. போர்ப் பாதையிலே வந்து நிற்கின்றோம்! பார்க்கிறோம்! அஞ்சா நெஞ்சினரும், ஆர்வத்தால் தம்மை மறந்தவரும், ஆற்றல் மிக்கவருமான தோழர்கள் உள்ளனர். கண்ணுக் கெட்டிய தூரம் வரையில்! அவர்கள் போர்வாள்; காண்பவர்கள்; கண்டு ரசிப்பவர்கள்! நடுநிசி வரை,

நாட்டுக்காக வீட்டை மறந்து, வெட்ட வெளியிலே கொட்டும் மழை வருமோ என்று நினைப்புமின்றி, ஆணும் பெண்ணும் குழந்தையும் கிழவருமாகக் கூடியிருந்தனர். ஏன்? 'நாங்கள் போய்விட்டோம், இனி இவர்கள் நாதியற்றவர்கள்' என்று நையாண்டி செய்தார்களே, சில சீமான்களும், அவர்களின் "பில்லைச் சேவகர்களும்", அது பொய் என்பதை நிரூபித்துக் காட்ட! இந்த மக்கள் கூட்டம் நமது பக்கம் இருக்கும் போது, உரிமைப் போரைத் தொடங்காமலிருக்க முடியாது. அந்தப் போர், தொடங்கப்பட்டே தீரும்! காலம் வெகு தூரத்திலில்லை!!

காங்கிரசார் மிகப் பலம் பொருந்திய மெஜாரிட்டி யினராக வந்தபோது பனகல் அரசர் சொன்னார்: "இதுவரை மெஜாரிட்டிக் கட்சி ஆண்ட காட்சியையே நீங்கள் கண்டிருக்கிறீர்கள். நான், ஓர் விசித்திரக் காட்சியை இனி ஏற்படுத்திக் காட்டுகிறேன் பாரீர்! சிறுபான்மையாக (மைனாரிட்டியாக) உள்ள கட்சி, பெரும்பான்மையினராக உள்ள கட்சியை ஆட்டி வைத்து, அரசாளும் காட்சியை இனிக் காண்பீர்கள்" என்று! செய்தும் காட்டினார். பனகலின் பேச்சுக் கேட்டு ஆடும் பதுமைகளாயினர், பாராளும் உரிமை பெற்றதாகக் கூறிப் பரங்கியரை மிரட்டிய காங்கிரசார். இன்று பெரியார் "இதுவரையிலே தேர்தலிலே நின்று வெற்றி பெற்ற கட்சியின் வீரச் செயல்களையும். அக்கட்சியைச் சட்டசபையிலே அமர்ந்திருந்து எதிர்க்கும் கட்சியின் வீரச் செயலையுமே கண்டிருக்கிறீர்கள். இனி ஓர் அதிசயத்தைக் காணப் போகிறீர்கள். அஃது என்ன? திராவிடர் கட்சி தேர்தலிலே நிற்கப் போவதில்லை. ஆனால், தேர்தலிலே நின்று வெற்றிபெற்று நிற்கக் குதூகலத்துடன் அரசாள வரும் கட்சியின் கொட்டம் அடங்குமளவு, சட்டசபைக்கு வெளியே இருந்து, உள்ளே இருந்து செய்வதைவிட

உக்கிரமான, உருவான எதிர்ப்புக் கட்சியாக இருக்கும். இந்த அற்புதத்தைச் செய்து காட்டுகிறேன் பாரீர்" என்று கூறுகிறார். திருச்சி மாநாட்டைக் கண்ட எவருக்கும், இது நடைபெற முடியாதது என்ற எண்ணம் வராது! இவ்வளவு வீரர்கள் இருக்க தீரத்துக்குக் குறைவு ஏது? பெரியார் பெரும்படை சட்டசபை புகாவிட்டால் என்ன? நாடு முழுதும் சட்டசபையாக்கிக் காட்டுவோம்! நாடாள வருபவர், மக்கள் மன்றத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தப்படுவர்! இது நிச்சயம்! "ஆள்வது நானா, இந்த இராமசாமி நாயக்கரா?" என்று ஆச்சாரியார் கேட்டார், ஆணவத்துடன் "ஒரு இராமசாமிக்காகப் பயந்து இந்தியை எடுத்து விடுவதா" என்று கோபித்துக் கூறினார். ஆனால், பாவம் "புற்றிலிருந்து ஈசல் போல் கிளம்புகின்றனரே! இந்தச் சனியனுக்கு இவ்வளவு தொல்லை இருக்குமென்று தெரிந்திருந்தால் இந்தியைப் புகுத்தியே இருக்கமாட்டேன" என்று அதே ஆச்சாரியார் அலறினார். எதைக் கண்டு? நமது கட்சி அங்கத்தினர்கள் சட்டசபையிலே குறிப்பிடத்தக்க எண்ணிக்கையுடன் இருந்தனரா? இல்லை! வேறு எதைக் கண்டு, அந்த வேதியருக்குச் சோகம் பிறந்தது? நாட்டிலே, மூண்டுவிட்ட எதிர்ப்பைக் கண்டு! பல ஆயிரக்கணக்கான கட்சி அங்கத்தினர்கள் முறைப்படி சேர்க்கப்படாமல், கட்சியின் கிளைகள் ஏற்படாமல் கல்லூரிகளிலே நமது குரல் கேளாமல் இருந்த நாளிலே இது சாத்தியமாயிற்று என்றால், கட்சி அங்கத்தினர்கள் குவிந்து, கிளைகள் ஆங்காங்கு தழைத்து, கல்லூரிகளிலே தளபதிகள் தயாரிக்கப்படும் இந்நாளிலே, தாளமுத்துவும் நடராசனும் பிணமாயினர் என்ற செய்தி இரத்தத்தில் சூடேற்றி விட்டிருக்கும் இந்நாளிலே, புரட்சிக் கவிஞரின் புதுக் கருத்துகள் நமது புண்ணைஆற்றிப் புதியதோர் வீரத்தை ஊட்டும் இந்நாள்களிலே, நடிகமணிகள் திராவிட நாட்டு விடுதலைக்காகக் கலையை வேலை வாங்கும்

இந்நாள்களிலே, கம்பனைக் காப்பாற்ற கலா ரசிகர்கள் ஓட்டை ஒடிசல் நீக்கப் பாடுபடும் இந்த நாளிலே, கொச்சியும் திருவிதாங்கூரும், மைசூரும், ஆந்திரமும் மாகாண மாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன என்று “இந்து” பத்திரிகை எழுதித் தீரவேண்டி நேரிட்ட இந்த நாளிலே, திருநாமம் தரிப்பதை மறவாத திருவாளர் வீடுகளிலேயும், “பார்ப்பனத் தீட்டு” கூடாது என்ற திட சித்தம் ஏற்பட்ட இந்த நாளிலே, தீப்பொறி பறக்கும் தீர்மானங்கள் இல்லையே என்று கோபித்துக் கூறும் தீரர்கள் திரண்டுவிட்ட இந்நாளிலே, காந்தியின் சம்பந்தியார் காங்கிரசிலே கள்ளத்தனமாக நுழைந்தார் என்று காமராஜர்கள் கூறக்கூடிய இந்நாளிலே, நாம், ஏன் சட்டசபைகளிலே நுழையாமலேயும், அந்தச் சபையில் நுழைந்து கொள்பவரை நமது இஷ்டப்படி நாட்டை ஆளச் செய்ய முடியாது என்று கேட்கிறோம்? அந்த நாளிலே அவ்வளவு முடிந்ததே! இந்த நாளிலே! எண்ணும்போதே களிப்பும் நம்பிக்கையும் கலந்து வருகிறது. கனிச் சாறும் கன்னல் சாறும் கலந்திருப்பது போல.

நாடான யாரேனும் வரட்டும், நாம் நாட்டு மக்களுக்கு, நமது பலத்தின்மீது ஆணையிட்டுக் கூறுகிறோம். அவர்களை “நல்ல பிள்ளைகளாக” நடந்து கொள்ளச் செய்வோம், நிச்சயமாக நம்மால் அது முடியும்!!

வேவல் நமது படைகளைப் பர்மா போர்க் களத்திலிருந்து இந்தியாவிற்கு அழைத்து வந்தார். போர்த் தந்திரம் தெரியாதவர்கள் கேலி செய்தனர்! பிறகு? அந்தமான் தீவுகளைக் கைவிட்டனர். நையாண்டி செய்தனர், போர்முறை அறியாதார். இன்று, படைப் பலத்தைச் சிதற வைப்பதும், தாக்குதலுக்கு ஒரு சமயம் என்பதை அறியாமல் தாக்குவதும் படைத் தலைவருக்கு இருக்குமானால், படை தப்பாது; வெற்றியும் கிட்டாது.

காங்கிரசு டோஜா, மலையோவையும் ஜாவாவையும், பிலிப்பனையும் பெர்ல் துறைமுகத்தையும் பிடித்துக் கொள்ளட்டுமே, பயம் ஏன்? டோக்கியோவைத் தாக்குவோம், சமயமறிந்து! அந்தத் தாக்குதலுக்குப் பிறகு வெற்றிக் கொலுமண்டபம், சரணாகதிச் சாசனம் கையொப்பமிடவேண்டிய இடங்களாக மாறுகின்றன. கவலை ஏன்? ஆனால், ரஷ்யப்படை, நாஜிப் படையுடன் கஷ்ட நஷ்டம் பாராது கடும்போரிட்டதாலேதான், மேற்கு அரசாங்கத்திலும் சரி, கிழக்கு அரசாங்கத்திலும் சரி, நேச நாட்டினரால் பிறகு வெற்றி காண முடிந்தது என்று கூறுவர்! உண்மை! அது போலத்தான், இன்றைய தேர்தல் போராட்டத்திலே, முசுலீம் லீக். ரஷ்யப் படையாக இருக்கிறது!! அதிலே சந்தேகம் ஏது? காங்கிரசுக்கு, முசுலீம் லீக், இந்தியாவின் ஏகபோக மிராசு பாத்யதை இல்லை என்பதை நிரூபித்துவிடப் போகிறது! ஆகவே இந்தத் தேர்தலிலே நாம் கலந்து கொள்ளாதது, கேடுள்ளதுமல்ல, காங்கிரசுக்கு இதன் பலனாகச் சர்வ வல்லமை ஏற்பட்டு விடப் போவதுமில்லை. நமது போர்க் கருவிகள் பழுது பட்டுக் கிடக்கின்றன! அவற்றைச் சரி செய்து கொள்வோம்; பிறகு பாய்வோம்! ஜப்பான் தாக்கிப் பிடித்த ஒவ்வொரு நாட்டையும், திருப்பித் தாக்கிப் பிடிக்க வேண்டிய அவசியமின்றித் தலைமேல் ஒரு பலமான தாக்குதல், அதன் பயனாகப் பிடிபட்ட இடங்கள் யாவும் சரணாகதி என்றானது போல இன்று ஒதுங்கி நிற்கும் நம்மால், ஓடிவரும் காங்கிரசை ஒடுக்கிவிட முடியும்! அந்தக் கட்சி ஆளச் சந்தர்ப்பம் தருவோம், அதன் மமதை மாள! இந்தப் போர்முறைச் சூட்சுமத்தைச் சிலர் தெரிந்து கொள்ளாத தற்குக் காரணம், “தேர்தல் தரகர்கள்” தேடிக் கண்டு பிடித்துத் தரும் தேய்ந்து போன ஆர்வம்! அஃதன்றி வேறில்லை! திருச்சி மாநாட்டிலே நாம் தெளிவாக்கி விட்டோம் இதனையும்.

மற்றுமொரு முக்கியமான முடிவு கண்டோம். அதாவது, சமுதாய இழிவுகளைத் துடைக்கப் போரிடும் ஒரு விடுதலைப் படையை அமைத்துள்ளோம். "கறுப்புச் சட்டை" அணிந்திருக்க வேண்டும் என்று பெரியார் கூறினார். ஏன், என்றும் விளக்கினார்: திராவிட மக்கள் அடைந்துள்ள இழி நிலையால் ஏற்பட்ட துக்கத்தின் அறிகுறி அந்த உடை என்றால். நாம் நாடிழந்து; அரசு இழந்து, தம்மில் பாமரர் அறிவிழந்து, மொழி வளமும் கலை உயர்வும் இழந்து, செல்வம் இழந்து, சீர் இழந்து, நாலாம் ஜாதியாய், ஒடுக்கப்பட்டுக் கிடக்கிறோம். நம்மை ஒரு சிறு கூட்டத்தார் கொடுமைப்படுத்துவது, ஏக்கத்தைத் தருகிறது. அதனினும் அதிகமான துக்கம், நம்மவரில் பலரும் அந்தக் கொடுமையை உணராமல் இருக்கும் நிலையால் ஏற்படுகிறது. இந்தப் பெருந் துக்கத்தைக் காட்டும் குறியாகவே கறுப்பு உடை அணியச் சொல்கிறார் தலைவர். ஏற்கெனவே உள்ள ஏளன மொழிகளுடன், நமது எதிரிகள் இனிக் கறுப்புச் சட்டைக்காரன். கள்ளன் போன்ற உடை அணிந்தோன் என்று புதுவசவுகளைச் சேர்த்துக் கொள்வர்; அவர்கள் ஆசையும் தீர்ந்து போகட்டும். கறுப்புச் சட்டை பாசிச அடையாளம் என்று பேசுவர் ஏட்டிலே சமதருமம் காண்போர், பேசட்டும்; நமது துக்கத்தை நாட்டுக்குத் தெரிவிக்கட்டும் நமது உடை! இந்த விடுதலைப் படை சமுதாய இழிவுகளைப் போக்கும் போரிலே முன்னணியில் நிற்கும்! இதற்குத் திருச்சி மாநாடு தந்துள்ள ஆர்வத்தைக் கொடுமையான நிலைமையைத் தமது கோணல் புத்தியைக் கொண்டு நீடிக்கச் செய்பவர் உணர்வது நல்லது. சமுதாய இழிவு எது, அதனை ஒழிப்பது எப்படி, எந்த முறையிலே என்பதிலே, திருச்சி மாநாட்டிலே காணப்பட்ட எழுச்சி, கட்சி அடைந்துள்ள புதுக் கூட்டத்தைக் காட்டுவதாக இருக்கிறது.

முன்பெல்லாம் சமுதாயச் சீர்திருத்தத்துக்காகவே இந்தக் கட்சி இருக்கிறது என்று டாக்டர் நாயர் போன்றவர்கள் முழக்கமிட்டு வந்துங்கூட, முற்போக்கான, கொஞ்சம் தீவிரமான கருத்துள்ள தீர்மானம் மாநாட்டிலே வந்தால் ஒரு நடுக்கம் ஏற்படும். எடுத்துக்காட்டாக, ஆதித் திராவிட மக்களை ஆலயங்களிலே அனுமதிக்க வேண்டும் என்று பேசப்பட்டால், 'அரகரா சிவ சிவா' என்று அலறுபவரும், ராம ராமா என்று அழுபவரும், இதைக் கூறிவிட்டு ஓட்டுக்குப் போனால் கிடைக்காதே என்று யூகமுரைத்தவரும், இவ்வளவு புரட்சிகரமாகப் போகக்கூடாது என்று எச்சரிக்கை செய்தவரும், நம்மிடம் இருந்தனர். **திருச்சியிலே ஒரு தலைகீழ் மாற்றம்! ஆதித் திராவிடர்களுக்குச் சகல கோயில்களிலும் பிரவேசிக்க அனுமதி தரவேண்டும் என்று தீர்மானம்!** இதற்கு, வைதீக எதிர்ப்பு, சனாதனச் சலசலப்பு, பழைமை விரும்பியின் பயம், இவை இல்லை! ஆனால், வேறு என்ன இருந்தது? "ஆதித்திராவிடருக்கு ஆலயப் பிரவேசம், ஒரு நன்மையும் செய்யாது! நாம் இதுவரை அங்கே சென்று கெட்டது போதும், பழங்குடி மக்களையும் அங்கு அனுப்பிப் பாழ் செய்யாதீர்! ஆலயங்களிலே என்ன இருக்கிறது? அது ஆரியக் கோட்டை! கள்ளர் குகை! சனாதனச் சேரி! வைதீக வளை! நாமோ அத்தகைய வைதீகப் பிடிப்பிலிருந்தும் மக்களை மீட்கும் பணியிலே ஈடுபட்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட நாம், ஆதித் திராவிடரை ஏன் ஆலயத்துக்குப் போகச் செய்து, அவர்களின் வாழ்வையும் அறிவையும் பாழாக்குவது?" என்று பலப் பல தோழர்கள், ஆர்வமும் ஆவேசமும் கலந்தது மட்டுமல்ல; உண்மையாகவே, கோயில் நுழைவு கேடு தரும் என்று உணர்ந்து பேசினர். கோயிலிலே ஆதித் திராவிடரை நுழைய விடுவது. மதத்துக்குக் கேடு, ஆசாரத்துக்கு ஆபத்து,

மஹா பாபம்! என்று பேசி வந்த காலம் மலை ஏறி, "ஆதித் திராவிடரை, ஏனய்யா அந்தக் கள்ளர் குகைக்கே போகச் செய்கிறீர் ? ஆலயப் பிரவேசம் என்ற தண்டனையை ஏன் குற்றமற்ற அந்த மக்களுக்குத் தருகிறீர்கள்?" என்று பேசப்படும் காலம் தோன்றிவிட்டது. ஆலயம்! இங்கே ஆதித்திராவிடர் நுழையக் கூடாது என்ற பலகை முன்பு! இப்போது "இது ஆலயம்! ஆதித்திராவிடத் தோழர்களே, உள்ளே போகாதீர்கள்! ஆரியன் அறிவையும் பொருளையும் அபகரிக்க உள்ளே பதுங்கிக் கொண்டிருக்கிறான்" என்று பலகை தயாரிக்கின்றனர், நம் தோழர்கள்! கடைசியில் ஆலயப் பிரவேச உரிமை கேட்பது, உரிமைப் போரில் ஒரு பகுதியே தவிர, ஆரிய மார்க்கத்திலே அவர்களைத் தள்ளுவதற்கு அல்ல என்று விளக்கம் தரப்பட்ட பிறகே, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது! அந்த அளவு சுயமரியாதை ஆர்வமும், தீவிர நோக்கமும் பொங்குகின்றன.! இந்தக் கொந்தளிப்பிலே, எப்படி ராவ் பகதூர்கள் தங்க முடியும்? தீய்ந்து போவர்! கோயில் எல்லாம் ஏழை விடுதிகளாகும்! வாசக சாலைகளாகும். காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள அழகிய இடங்களாகும்" என்றார், சுயமரியாதை மாநாட்டுத் திறப்பாளர். தோழர் நீலமேகம். அந்த வாசகத்தக் கேட்டு, நாட்டினர் கொட்டிய கரகோஷம், ஆரியக் கோட்டைகளை அதிரச் செய்யக் கூடியதாக இருந்தது! அத்துணை ஆர்வம்! அவ்வளவு எழுச்சி! தலைவர்களின் வீர உரைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே எடுத்து விளக்கப்பட வேண்டியவை. எனினும் எல்லோருடைய உரையிலும் ஒரு மூல தத்துவம் பொதிந்து இருந்தது. அதனைச் சுயமரியாதை மாநாட்டுத் தலைவர் டி.சண்முகமும், திராவிட மாநாட்டுத் திறப்பாளர் தோழர் அர்ஜுனனும் விளக்கமாகக் கூறினர்.

அதாவது திராவிட நாடு திராவிடருக்கே என்பதாகும்! தோழர் அர்ஜுனன் அவர்களுடைய அரிய உரையிலே, வடநாடு பொருளாதாரத் துறையிலே பெற்றுள்ள ஆபத்து நிறைந்த ஆதிக்கத்தை விளக்கியிருந்தார். அந்த ஆதிக்கத்தை அறுபடச் செய்யப் பெரும்படை திரட்டி நடத்தக் கூடியவர் பெரியார் என்பதைத் தோழர் சண்முகம் அழகுறத் தமது பேருரையிலே எடுத்துக் காட்டினார். திருச்சி மாநாடுகள் விழிப்புற்ற எழுச்சியுற்ற திராவிடத்தின உருவைக் காட்டிற்று!

பெரியாரின் செல்வாக்குச் சிறப்புத் தரும் சித்திரங்களாகவும், உறுதியுடன் உழைக்கும் தலைவரை, ஒருபோதும் வாலிப உலகு மறவாது, பின்பற்றத் தயங்காது என்பதை விளக்கும் காட்சிகளாகவும் இருந்தன. மறக்கொணாத காட்சிகள்! மதியுடையோருக்கு, திராவிடத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை உணரச் செய்யக்கூடிய காட்சிகள்! திருச்சி, தன் கடமையை மிகமிகப் போற்றக்கூடிய விதத்திலே நிறைவேற்றிவிட்டது. "நம்மாலே முடியுமோ" என்று கொஞ்சம் பயந்த குரலிலே பேசியே பழக்கப்பட்ட நண்பர் வேதாசலம் அவர்களின் விடா முயற்சியின் பயனாக ஏற்பட்ட வெற்றி அந்த மாநாடுகள்! அவருக்குப் பக்க பலமாக இருந்தனர், பொன்மலை, திருச்சி, தஞ்சை முதலிய பகுதிகளிலே உள்ள பெரியார் தொண்டர் படையினர். மாநாட்டு வெற்றிக்கான பங்கு செலுத்த ஒவ்வொரு வட்டாரமும் ஆர்வத்துடன் முன் வந்து அற்புதமான வெற்றியை உண்டாக்கிற்று.

திருச்சி மாநாடு, கூடும்போது பெரியாருக்கு வயது 67. மாநாடு முடிந்த பிறகு அவருக்கு வயது 45. அவ்வளவு "வாலிப முறுக்கு" ஏற்பட்டுவிட்டது. இளைஞர்களின்

எழுச்சிக் குரலைக் கேட்டதன் பயனாக!! மாநாட்டுக்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலே, இடையிடையே நேரிட்ட தொல்லைகளும், திடீர் ஆபத்துகளும் பல. அவை யாவும், கரும்புக்குள்ள கணுப்போலாயின! திருச்சித் தோழர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்! வெற்றிகரமாக அவ்வளவு பெரிய மாநாட்டை நடத்திய பெருமையை அடைந்த திருச்சி, திராவிட நாடு திராவிடருக்கு ஆக்கப்படுவதற்கான முயற்சி முகாமாகிப், பயிற்சிக் கூடமாகி, பாசறையாகி, திராவிடத்துக்கு வழிகாட்டும் என்று நம்புகிறோம். மாநாடு வெற்றிகரமாக நடந்தேறப் பல்வகையானும் உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி, வாழ்க திராவிடம் என்று இதனை முடிக்கிறோம். திருச்சி மாநாடு, உண்மையிலேயே திராவிடருக்குப் போர்வாள் தந்திருக்கிறது! ஏந்திய வாளை அஞ்சா நெஞ்சுடன் வீசத் திராவிடத் தீரர் கூடினர். தலைவர் தந்த போர்வாளை முத்தமிட்டுக் கரத்திலே பிடித்துள்ளனர்! முன்பெல்லாம் ஜஸ்டிஸ் மாநாடுகள், உத்தியோகத்துக்கு மனுப்போடும் பேனா முனைகளைத் தந்தது வாலிபர்களிடம். திருச்சியிலே வாலிபர் கரத்திலே தரப்பட்டது போர்வாள்!! திராவிடத்திலே படர்ந்துள்ள ஆரியக் கள்ளியை வெட்டி வீழ்த்த, வைதிகமென்ற பெயரால் வளைந்து நெளியும் வஞ்சனையைக் கூறு கூறாக்க, மக்களின் மனத்திலே குவிந்து கிடக்கும் மடமை எனும் நச்சுக்கொடியை அறுத்தெறிய, ஜாதி பேதமெனும் முட்புதரை அழிக்க, வீரரைத் தழுவி வீணராக்கும் பழைமை எனும் கொடுமையைக் கொல்ல. திராவிடத்தை மீட்கப் போர்வாளைத் திருச்சியில் தீரத் திராவிடர் கரத்திலே தந்தது.

அறிஞர் அண்ணாவின்

வர்ணாசிரமம்

இலட்சியம் வளர்ந்த வரலாறு

போர்வாள்

நூல் கிடைக்குமிடம் : GO 544

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

www.gowrabookfair.com

கௌரா ஏஜென்ஸீஸ்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
gowra09@gmail.com

ரூ. 25